


வாசக சகோதர சகோதரிகளே, உபயகுசலம்!

ஸ்ரீகீதாசாரியன் பரமக்ருபையினலும், உங்களுடைய அன்பும் ஆசியும்கொண்ட பேராதரவினலும் ஜகன்மோகினிச் செல்விக்கு இன்று மங்களகரமாகப் பிறந்துள்ள 33-வது ஆண்டின் முதல் இதழை பகவான் திருவடிகளில் சமர்ப்பித்து, இன்பமுடன் வாசக மகனீயர்களுக்கு அர்ப்பணிக்கின்றேன். அறிவில் சிறந்த அன்பர்கள் எல்லோரும் என்றும்போல் தங்கள் மேலான ஆதரவை அளித்து உதவுமாறு வேண்டுகிறேன். நிற்க, வாசகர்களின் விருப்பப்படி பல புதிய அம்சங்களுடன் இந்த வருஷ ஆரம்ப இதழை வெளியிட்டிருக்கிறேன். அவைகளைப் பொருளடக்கத்தில் காணவும்.

சென்ற மாத அறிவுப் போட்டியில் ஏராளமான சகோதர சகோதரிகள் விடையனுப்பியதுபற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆனல் பெரும்பாலோர் இரண்டு தப்புகள்...ஒரு தப்பு உள்ள விடைகளையே அனுப்பி இருக்கிருர்கள்.

**சரியான விடை :**

1—**திருமாலும் சிவனும் விரும்பும் பக்தன்: ஸர்பராஜன்**

2—**ஆளையும் கெடுக்கும் ஜீவன்: சிற்றெறும்பு**

3—**பெரும்பாலோரின் மணவாழ்க்கையின் எதிரி: வரதக்ஷிணை**

இந்த சரியான விடைகளைக் கீழ்க்கண்டவர்கள் எழுதியிருக்கிருர்கள்:—ரங்கநாயகி—ராஜபாளையம், ரமணி—காரைக்குடி, சேச்சம்மாள்—பெங்களூர், கோவிந்தசாமி—பம்பாய், புஷ்பாவதி—ஷிமோகா, ரமணி பரமேச்வரன்—மேலார்க்கோடு, லீலாவதி நாகராஜன்—அம்பாசமுத்திரம், சாந்தா—திருநெல்வேலி, துளசிபாய்—நாகர்கோயில், கந்தசாமி—சேலம், விஜயா—பூனு, லக்ஷ்மி—டில்லி, கோமளவல்லி—காஞ்சி, முருகநாயகர்—சிந்தாதிரிப்பேட்டை, வெங்கடேசன்—அடையாறு, நரஸிம்மாச்சாரி—கல்கத்தா, தங்கவேலு—பொன்மலே, ஸீதாபாய்—விஜயவாடா ஆகியவர்களுக்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் புத்தாண்டு இதழை அலங்கரித்துள்ள எழுத்தாள சகோதர சகோதரிகளுக்கும் எனது இதயபூர்வமான வணக்கத்தைச் செலுத்துகிறேன். வழக்கப்படி ஜகன்மோகினிக்குத் தங்களுடைய பேராதரவையும் அன்பையுங் கொடுத்து உதவக் கோருவதோடு உங்கள் அருமையான அபிப்ராயங்களைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

—வை. மு. கோ.



# ஜகன்மோகினி



ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி

ஜனவரி 1956. மலர் 33, இதழ் 1. மன்மத ஹூ மார்கழி

## பொருளடக்கம்

பக்கம்




அரசியல் ([illegible])
மாகாணப் புனரமைப்பு
—V. K. பார்த்தஸாரதி ஐயங்கார்
இலக்கியம் (ஸம்ஸ்க்ருதம்)
காளிதாஸர் கனவு
—R. S. ராமஸ்வாமி சாஸ்திரி [illegible]
தத்துவம் (ஆராய்ச்சி)
மேனாட்டின் தத்துவம்
—ரா. ஸ்ரீ. தேசிகன் [illegible]
அறிஞர் அமுதவாக்கு
—அஸ்வின் 39
சரித்திரம்
திருநெடுந்தாண்டகத் திருநாள்
ஸ்ரீ காஞ்சீ ப்ர. அ. ஸ்வாமி 41
கம்பனை—அளப்பும் அறமும்
—T. C. K. மல்லிகை கஸ்தூரி 17
ஜீவிய சரிதம்
—நவீனத்தின் நாயகன்
—K. சூடாமணி 10
பாலர் யோகினி ஸ்ரீ ராம்ஜீ [illegible]
—வை. மு. விஜயலக்ஷ்மி 28
ஆட்டுக் குட்டியம்மா
—விருச்சிகம் 25
விகட வெடிகள்
—புஜலா 32
குடும்ப வைத்தியம்
வயிற்றுக் கோளாறு
—V. அஹோபிலா 63
வாழ்க்கையில் ஒரு துடிப்பு
—உண்மை விளம்பி 14
உண்மைச் சித்திரம்
சரியாசம்பவம்
—வை. மு. கோ. 44
தொடர் கதைகள்
ராஜாராம் நாயுடு—
—வை. மு. கோ. 112-வது நாவல். 145
பரிமளம்
—வை. மு. பத்மினி ஸ்ரீனிவாஸன் [illegible]

# மாகாணப் புனரமைப்பு

'பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற் கிவ் வைந்து'—.

புத்தாண்டு புலர்ந்தது !—'சர்வேஜனா சுகினோ பவந்து—வாழ்க இந்தியர் !

ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன், தமது அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள். இதைப் பரிசீலனை செய்து, உருவும் உயிரும் தரவேண்டியது, நமது பார்லிமெண்டாரின் பொறுப்பு—. சட்டசபைகளில், இவ்வறிக்கை ஆலோசனைக்கு எடுக்கப் படுங்கால், அரசியல் சட்டத்திற்கு விரோதமான வகையில் சில அம்சங்கள் அமைந்துள்ளது பற்றி ஆக்ஷேபனை எழ, "குல்லாய்க்குத் தகுந்தபடித் தலையைச் சீவி விடு" என்பதுபோல, அரசியல் சட்டத்தையே திருத்தி, அறிக்கைப் பரிசீலனையையும் ஒத்திப்போட்டு விட்டார்கள். இந்தத் தீர்மானப்படி., இவ்வறிக்கை, பலவேறு மாகாண அரசாங்கத் திற்குமனுப்பப்பட்டு, ஜனாதிபதி குறிப்பிடும் ஓர் கால அளவிற் குள் அவ்வவ்வரசாங்கம தத்தம அபிப்ராயத்தை வெளியிட வேண்டுமென்றுகிறது—. அறிகையின் பரிசீலனையை ஒத் திப்போட, சபாநாயகர் எடுத்துக்கூறிய காரணமும உபமான மும் வேடிக்கையாகவே இருந்தது—. 'செருப்புககடி, அதை அணிபவர்களுக்குத் தானே தெரியவரும்—. ஆகவே கமிஷன் தைத்துக்கொடுத்த செருப்பை, அதை அணியப்போகும் மாகாணத்தாருக்கே யனுப்பி, அவர்களது அபிப்ராயங்களை அறிந்த பின்னரே அவ்வறிக்கைககு ஏற்ற உருவும், போதிய உயிருங்கொடுக்க, நாம் யோசிக்கவேண்டும், என்றார் சபா நாயகர்—. இந்தச் செருப்புதான உபதேசமும், மாகாணப் புனரமைப்புத் தொல்லையை ஒதுக்கிவைக்க, மாகாணத்தாரின கண்ணையும் துடைத்து, காலையும் பிடிப்பதுபோனற தந் திரமோ, என்னவோ !

வம்புச் சண்டையை விலைக்கு வாங்குவதென்ற கந்த போனறதுவே, மத்திய சர்க்கார் இந்த மாகாணப் பிரிவினைப் பி[illegible] தவிப்பதுவும்—. பொட்டி ஸ்ரீராமுலு ச[illegible] கலகங்களும் குறைகளுங்கண்டு பயந்து, ஆந்திராருக்கு [illegible]மே ஆந்திர ராஜ்யம் அளித்து விட்டனர். ஆந்திரர் வெற்றி கண்டு, பாஷாவாரி மாகாணப்

183198

பிரிவினை கோரியழுத இதர பாஷாக்குழந்தைகளுக்கும், பாஷாவாரி மாகாணப் பிரிவினை வாக்குறுதி என்ற வாழைப்பழங்காட்டியே காலங்கழித்து வந்தனர்—. இன்றைக்கு இருபது வருடங்களுக்கு முன்னதாகவே, காங்கிரஸார், இந்திய ராஜ்யத்தைப் பாஷாவாரி மாகாணங்களாக பிரித்தமைக்கும் வாக்குறுதி தந்தவர் தாம்...சுதந்திரம் பெற்றபின்னர். இவ்வாக்குறுதியை நிறைவேற்றவே தீர்மானித்தவர்போல, டேபார் கமிஷன் வந்தது; ஜெ. வி. பி. ரிபோர்ட்டு வந்தது; இப்பொழுது இந்த S R. C. என்ற மாகாணப் புனரமைப்பு கமிஷன் அறிக்கையும் வந்துவிட்டது—. வெளிவந்த அறிக்கையின் பரிசீலனை, காலவரையின்றி ஒதுக்கிவைக்கப்பட்டுமாகிவிட்டது—அறிக்கையின் பரிசீலனைமட்டுந்தான் ஒதுக்கிவைக்கப்பட்டதேயொழிய, கடந்த ஒருவாரமாகச் சட்டசபைகளில் இதுபற்றி நடந்தேறிய பேச்சு மழையும், சர்ச்சைப் புயலும், சமீபத்தில் தென்னாடுகளில் மூண்ட மழைகாற்றுச் சேதத்திற்கு மேலான சீற்றத்தையே நாட்டில் எழுப்பியுள்ளன—. உணர்ச்சித் தீ அணைக்கப்படவில்லை—. அடித்தீயை அணைக்காது, மேல் கூரையை மூடிவைப்பதால், யாருக்கு சுகம்?—, யாருக்கு லாபம்?—.

'அறிக்கைச் சிபாரிசுகளை அமுலுக்குக் கொண்டுவராது, பெட்டியில் பூட்டிப் போட்டுவிடப் பார்க்கிறார்கள்'—, என்று எதிர்ப்புக் கக்ஷியாளர் கூச்சல் கிளப்புகின்றனர்—. 'இல்லை, இல்லை-. மாகாணத்தாரைக் கலந்திடவே அவகாசம் பெற்றுள்ளோம்-. வருகிற அக்டோபருக்குள் பரிசீலனைக்குக் கொண்டு வருகிறோம்'—. என்று சமாதானம் சொல்கின்றனர், அதிகார வர்க்கத்தினர்-. 'பாஷாவாரிப் புனரமைப்பே பொதுமக்கள் வேண்டுவது—. அறிக்கையின் சிபார்சுகளும் அம்முறைத்ததுவே'—. என்று கர்ஜிக்கின்றனர். கேரள, கன்னட, மகாராஷ்டிர, குஜராத்தியராதி பாஷா வெறியாளர்கள்—. க்ஷேமலாப ராஜாங்கத்தில்,-(Welfare State)-. சமதர்ம சமுதாய ஸ்தாபனஞ்செய்யக் கங்கணங்கட்டியுள்ள காங்கிரஸ் அரசியல் தலைவர்களது அகக்கண்கள், இப் பாஷா வெறித் தீ எழுப்பி வீசும் வெப்பக்கனல் பட்டதுந்தான் விழிப்புற்றதுபோலும்!—.

'பாஷா வெறி மிகத் தீயது—, அவ்வழிப்புனரமைப்பு, தற்கொலை சிகிச்சையே-. பாஷையும் மதமும் அவரவர், தத்தம் வீட்டிற்குள்ளேயே போற்றி வளர்க்கவேண்டிய புனித சாதனங்கள்—. சமூக சமுதாய சர்ச்சைகளில் இவைகளை இழுத்துவிடாது, 'பாஞ்ச சீல'ப் பாதை வழியே போகவேண்டும்'—என்ற நீதோபதேச பிரசாரத்தில் மூழ்கிவிட்டார் பிரதமர் நேருஜீ—. பாவம்!— பாஷை வெறியை பல திக்கிலும் மூண்டெழிய விசிறி வளர்த்தது யார்?—. மதம் என்பதைச்

சந்ததியிலிழுத்துச் சட்ட திட்டங்களை ஏற்படுத்திப் போவது யார்?—.

'நாம் கருதவேண்டியது, இந்தியத் தாய்நாட்டின் மேன்மையும், இந்தியப் பொதுமக்களது நன்மையுமேயொழிய, தனிப்பட்ட மாகாணங்களுடையவோ, மாகாண மக்களதுவோவான சுயநலமல்ல—. மாகாணப் புனரமைப்பு, நம் தாய்நாட்டின் உயர்வுக்கநுகுணமாகவே ஏற்படவேண்டியதவசியம்'—. இதுதான், இன்று, நமது நேருஜீயும், யூனியன ஹோம் மினிஸ்டரும் இந்தியப் பொதுமக்களுக்குச் செய்துவரும் மகாமந்திரோபதேசம்—. இந்தப் பிரசாரம், புதிதல்லவே!—. சிருஷ்டிகால முதல்—, ஆள்வோர் - ஆளப்படுவோர்—, என்ற நிலை ஏற்பட்ட கால முதல் பாடப்பட்டுவரும் பல்லவிதானே! அநுஷ்டானத்தில் தானே வந்தபாடில்லை-.

'நம் இந்தியாவில், பல பாஷைகள் வழங்கிவரும் மாகாணங்களும் உளவே!-. பம்பாய்ப் பிரச்னையைப் பாருங்கள்!—ஆகவே, ஒரே பாஷைகொண்ட மாகாணப்புனரமைப்பு என்பது, அநுபவத்தில் அசாத்யமானதாயிற்றே'—. என்று கண்ணீரும் உதிர்க்கிறார்கள் அரசாங்க வர்க்கத்தினர்!—. இதையொட்டி-, நேருஜீயின ஹிதோபதேசம், பினவருமாறு அமைந்துள்ளது—. 'சுயபாஷாபிமான மென்பதால் இதர பாஷைகள்மீது துவேஷகாரணமாக, உள்நாட்டுக் கலகங்களும் குழப்பங்களும் ஏற்படத்தான் சந்தர்ப்பங்கள் கூடுவதாகிறது— ஆகவே, பாஷாவாரி மாகாணப் புனரமைப்பு முறை, இந்திய ஒற்றுமைக்கோ மாகாணக்ஷேமத்திற்கோ ஏற்றதல்ல...அதை மறந்துவிடுங்கள்.... பொருளாதாரக் கூட்டுறவு வகைத்தானதோர் புனரமைப்பு வழியைத் தேடவேண்டும்.... இது வழியில், எனனுடன ஒத்துழையுங்கள்'—என்பதுதான். சபையில் கடைசிப்பேச்சில் நேருஜீவிடுத்துள்ள சில யோசனைகள் தாம் இனி நம்மால் நன்கு யோசிக்கப்படவேண்டியவை... அவர் சொன்னார்—;

'பாஷையும் மதமும் அவரவரது சுயார்ஜிதம்—. இந்தியர்களுக்கே பொதுப்பட்டதான தனிப்பட்டதோர் கலாசாரப பண்பாடென்ற அபூர்வ மூலதனம் உளளது—. அதைவிடாது பாதுகாத்து, அதையொட்டியே மாகாணததார், தமது பாஷைக்கும மதாசார சதாசாரத்திற்கும் ஏற்றபடி சீர்ப்பட்டமைந்து, இந்திய ராஜ்ய ஏக குடும்பத்திற்குள், கண்யமான நாலைந்து பெருந்தனிக் குடும்பங்கள் போன்ற பிரதேசங்களாகப பிரிந்திருந்து வாழ்க்கை நடத்துவதே இந்திய உயர்வுக்கும், தனிப்பட்ட மாகாணங்களது மேன்மைக்கும் ஏற்றமுறை'—,

பாஷாவாரி சம்பந்தமின்றியே, இந்திய நாட்டை நாலைந்து பெரும் பகுதிகளாக— (Zonal Divisions) அமைத்து ஆட்சி முறை நடத்துவதே நேர்முறை என்பதை, ராஜாஜியே முன்னொரு கால் சுட்டிக்காட்டியுள்ளார்—. ஆனால், அச்சமயம், அந்த ஹித வார்த்தை, செவிடன் காதில் ஊதப்பட்ட சங்கநாதமபோல் போயிற்று. இன்று, பாஷா வெறிப் பெருந்தீயின் போக்கைத் தடுக்கவேண்டிய அவசியம் தனக்கே தெரிந்தக்கால்தான் போலும், அத்தீயணைக்கவேண்டிய நீர் தரும் சேணியைத் தேடலானார் பிரதமர் நேருஜி!—. ராஜாஜி ஏற்கனவே வெட்ட முயன்ற 'த்ஸோனல் டிவிஷன்' கிணறு திட்டம் ஞாபகம் வந்துவிட்டது—.

அவகாசத்துடன் ஆராய்ந்து பார்த்தால், இந்த 'த்ஸோனல் டிவிஷன்' ஆட்சிமுறை, அரசியல் ஏக குடும்ப இந்தியர் வாழ்க்கை ஸ்தாபனமேயாகிறது—. நமது அரசாங்கத்தாரே தமது அரசியல் முறையில், இந்த ஏக குடும்பஸ்தாபன முறையைக் கையாளச் சிந்திப்பது நமது பூர்வ புண்ய பலனே!— பிராரப்த கர்ம நிவாரணகால சூசகமே!—. எனவேதான் போலும்,— 'நமது இந்தியா, நம்மையும் தன்னையுமறியாது, விதியோ தெய்வகதியோ யென்றதோர் அபூர்வசக்தியால் உந்தித்தள்ளப்பட்டு, உலக முன்னேற்றப் பாதையில் உயர்பதம் பெற்றிட வெகுவேகமாய ஓடுவதாகிறது'—. என்ற உணர்வு, நேருஜி மனத்திலும் இடம்பெறுவதாயிற்று!—. விதி வலியும், ஈச்வர சக்தியும உண்டென்று ஒப்பும் நமது பிரதமர் சொல்படி நடந்திட இனி நாம தயங்குவானேன?—, நமது பிதிரார்ஜித குலதனத் தாய்நாட்டை 'த்ஸோனல் டிவிஷன்'களாகப் பாகப்பிரிக்கட்டும். ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு கவர்னரும், ஆலோசனைச் சபைகளும இருக்கட்டும். தனிப்பட்ட உயர்தர நீதி ஸ்தாபனங்கள் வேண்டுமானாலும் இருக்கட்டும். மாகாணச் சபைப் பிரதிநிதிகள் மத்திய சபைகளில் கலந்து ஒத்துழைத்து, ஆட்சி நடத்தட்டும்—. தாயைக்காட்டிக் கொடுக்காது, தாயுடன் சண்டையிட்டுத் தனித்துப்போன தானதோன்றிகளென்றில்லாது, தாய்க்கீழ் மக்களான ஏககுடும்ப இந்தியர்களாக வாழவே நாம விரும்புகிறோம—. 'கூடியிருந்து குளிர்ந்தேலோரெம்பாவாய்'— தேசிய உணர்ச்சியைப் பாஷாவெறித் தீயிலிட்டுப் பொசுக்கிப் போக்கிடாதபடி, மாகாணப் புனரமைப்பு செய்துகொள்வோம—. 'மேனாட்டார்தம் நவநாகரீகச் சதாசார ஒழுக்க முறைகளையே நாமும் கைப்பற்றி, ஹிந்துமதமென்று நம்மைப் பயமுறுத்தும அநாகரீகப் பேயை நம நாட்டினின்றும் சீக்கிரமே விரட்டியோட்ட வேண்டும்,—, என்றபடிக்கு, ஸர்தார் பணிக்கர் போன்றோர், பிதற்றிக்கொண்டே போகட்டும—. அறிவுள்ள இந்து எவராவது. கால உணர்ச்சி வசப்பட்டு, மான உணர்ச்சியை மறப்பாரோ?—. இராஜாஜியே இன்று ராமாயணப் பிரசாரம் செய்யவில்லையா?—. நேருஜியும், மதமென்றும், விதியென்றும் தெய்வ சக்தியென்றும் இன்றாவது சிந்திக்க ஆரம்பிக்கவில்லையா?—. இவர்களைவிடச் சிறந்த, தேர்ந்த உண்மைத் தாய் மக்களும் உளரோ? பாஷா வெறியடங்கி, நாட்டில் ஏக குடும்

வாழ்க்கை மனப்பான்மை திடப்படும்வரை, மாகாணப் புனரமைப்புக் கமிஷன் அறிக்கைப் பரிசீலனை, ஒத்திவைக்கப்பட்டது, நமது நன்மைக்கேயான ஈச்வர சங்கல்பமே!— நேருஜி சொல்வது போல, உபரி மாகாணங்கள் உள —. பத்தாகக்குறை மாகாணங்களும பல உள—. பாஷாவாரிப் பிரிவினைமுறை கையாளுவோமாகில், ஏழைகள, என்றும் ஏழைகளாகவே ஏங்கித் தவிக்க வேண்டியவர் தான—. தனவந்தர், மேலுந்தனமபெருக்கி உபரிபெருக்குபவரேயாவர்!—இதைத் தவிர்க்க, 'த்ஸோனல் டிவிஷன' முறையே ஏற்ற மருந்தும, சிகித்ஸையுமாகும்—. நோயுற்ற மகனையும் சோம்பேறிப் பிள்ளையையும, தனமற்ற தநயனையும, பெருமித ஊதியம் பெறும் புதல்வர்களோடு பிணைத்து வாழவைத்து, எல்லோரையும் சரிசமானமாகப் பாவித்து ஆதரித்துக் காத்துவாழும் அன்புக்களஞ்சியமாம் தாய்தகப்பன கொண்ட இனபக் குடும்பம, நமது ஹிந்துமதம் தவிர்த்தவேறெந்த மதாசாரத்திலாவது, சதாசாரத்தியாலது இடம்பெற்ற துண்டா?—. துவேஷமும பேதமும பெருக்கும பாஷா வெறி விடுத்து, பிறரையும தன்னைப்போலவே மதித்துப்பாராட்டும் அன்பும், ஆதரவும், சகிப்புத்தனமையும் சகோதரத்வமும் கொண்ட மனப்பானமை வளர்க்கும் அரசியல் ஏககுடும்ப இந்திய மக்களாக மாகாணப புனரமைப்பு விதித்துக் கொண்டு, உலக வழிகாட்டிகளாக நம்மை வாழவைக்கவே நமது நேருஜியும் அரசியல் அதிகாரிகளும்,பார்லிமெண்டு பிரமுகர்களும் வழிதேடுவார்களாக.

> பல் குழவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்துங்
> கோல்குறும்பு மில்லது நாடு—'

வந்தேமாதரம்!—. பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!—
பொங்கலோ பொங்கல்!—. வாழ்க, தாய்நாடு!—
ஒழிகபாஷாவெறி!—ஓங்குக இந்தியர் ஒற்றுமை!—. ஜெய் ஹிந்த்!

V. K. பார்த்தஸாரதி அய்யங்கார்
அட்வகேட் திருவல்லிக்கேணி

---


## சென்னை ரேடியோவில்
## "நீலவண்ணன்"

வை. மு. கோ. நடத்தும் தொடர் இசைச் சித்திரம்.

| | | | |
|---|---|---|---|
| முதல் பாகம் | 6—1—56 | 1 மணி | "சோலைக்கிளி" |
| இரண்டாம் பாகம் | 20—1—56 | ஷை | "மாயவனின் மாயலீலைகள்" |

(தொடர்ச்சி: பிப்ரவரி, மார்ச் மாதங்களில்.)

---

### வை. மு. ஸ்ரீ. நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. உதய சூரியன் | 1—4 | 6. இருளில் ஒளி | 1—4 |
| 2 மதமா, மனமா? | 1—4 | 6A ஸ்ரீ ஸ்துதி | 0—4 |
| 3. அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி | 1—8 | 7. தியாகபலி | 0-12 |
| | | 8. ஜெயந்தி சிந்தனைகள் | 1—8 |
| 4. ராணி சீலாவதி | 1—0 | 9. ஸ்ரீ கோதா ஹ்ருதயம் | 0-12 |
| 5. பெண்மணிக கனல் | 1—0 | 10. ஒபிலா நாட்கள் (அச்சில்) | |

# காவிதாசர் கனவு

## 8. உமாப்ரஸாதம்—குமாரஸம்பவம்

[கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

அப்பொழுது அவர்களில் முதல்வரான அங்கிரஸ் என்ற ரிஷி "இமய அரசே! இமயத்தின் உச்சி எப்படி ஒப்பற்ற உயர்வுடன் விளங்குகின்றதோ அப்படியே உம்முடைய மனமும் உயர்ந்திருக்கின்றது. ஆகையால்தான விஷ்ணு,மலைகளில் உங்கள் உருவமாக இருப்பதாகக் கூறினர். நாங்கள் இப்பொழுது வந்த செய்தியைக் கேளும். சந்திரசேகரர் உங்கள் மகள் உமையை மணஞ்செய்து கொள்ள விரும்புகின்றார். நீங்கள் அவருடைய விருப்பத்தையும், உலகத்தின நன்மையையும் நிறைவேற்ற வேண்டும். இவளோ எல்லா உலகங்களுக்கும் தாய்; அவரோ தந்தை. அவர்களுடைய திருமணத்தைக் கண்குளிரக் காண உலகமெல்லாம விரும்புகின்றது".

இந்தப் பேச்சைக் கேட்ட பொழுது பார்வதி நாணத்தால் முகம் சிவந்து, தலை குனிந்து, கையிலிருந்த தாமரை மலரின் இதழ்களை ஒவ்வொன்றாக எண்ணி நின்ருள். இமய அரசனுக்கு அளவற்ற ஆனந்தம் மனதில் எழுந்தாலும் தன் மனைவி மேனையை நோக்கி அவளுடைய விருப்பத்தை எதிர்பார்த்தார். விவாக விஷயங்களில் மனைவிக்கன்ருே முதல் உரிமையும் பொறுப்பும். திருமண நோக்கில் மனைவிதான கணவனுக்குக் கண்.

ப்ராயேண க்ருஹிணீ நேத்ரா:
கன்யார்தேஷு குடும்பின: ||

அவளும் கணவனுடைய எண்ணப்படியே இணங்கினள். பதிவிரதைகள் பதியின மனங்கோணுமலே நடப்பார்கள்.

பவந்த்ய வ்யபிசாரிண்யோ
பர்துரிஷ்டம் பதிவ்ரதா: |

உடனே இமய அரசன பார்வதியை அழைத்து சப்த ரிஷிகளையும், அருந்ததியையும் நமஸ்காரம் செய்யச் சொல்லி "இதோ பரமேச்வரனுக்கு நான அர்ப்பணமாக கன்யகாதானஞ் செய்யப்போகிற மணபபெண் வணங்குகின்ருள்" என்று மகிழ்ந்துரைத்தார். உடனே அருந்ததி நாணி நிற்கும் பார்வதியைப் பரிந்தெடுத்து முத்தமிட்டுத் தன மடியில் வைத்துக் கொஞ்சி மகிழ்ந்தாள். அந்த தினத்திற்கு நானகாவது நாள் விவாக முகூர்த்தம் நடக்க வேண்டும் என்று நிச்சயஞ்செய்து சப்தரிஷிகள் அருந்ததியுடன் சென்ருர்கள்.

உடனே இமய அரசனுடைய தலைநகரம் மணக்கோலமாக அலங்கரிக்கப்பட்டது. விவாகதினத்தன்று சிறந்த பதிவ்ரதைகள் மங்களநீராட்டி வெண்பட்டுடுத்தி ஜோதிமயமான நகைகளால் சிங்காரித்து மணவறைக்கு அழைத்து வந்தார்கள். தேய்பிறை காலம் முடிந்து வளர்பிறை காலம வந்ததும் சூர்யகிரணங்களால் பூரிக்கப்பட்ட சந்திரன்போலவும், மலர்கள் நிறைந்த கொடிபோல

வும், நக்ஷத்திரங்கள் நிறைந்த இரவுபோலவும் அவள் மிகவும் விளங்கினுள்.

பபௌசஸம்பர்ஸமுபேத்யபாஸா
நவேவ தீக்ஷா விதிஸாய கேன |
கரேணபா னோர்பஹுலாவ ஸானே
ஸந்துக்ஷ்ய மாணேவ சசாங்கரேகா ||
ஸாஸம்பவத்பி: குஸுமைர்லதேவ
ஜ்யோதிர் ப்ருத்யத்பிரிவ த்ரியாமா |
ஸரித்வி ஹங்கைரிவ லீயமானே
ரா்முச்ய மாநுபரணு சகாஸே |

பார்வதி ஒளிவீசும ஆடையாபரணங்களால் சிங்காரிக்கப்பட்ட தன்னுடைய ஒப்பற்ற அழகைப் பெரிய கண்ணுடியில் கண்கொட்டாமல் கண்டு அது பரமேச்வரனுக்கு அளவற்ற ஆனந்தத்தைக் கொடுக்கும் என்ற நினைவின் உதயத்தால் பூரித்து மகிழ்ந்தாள்.

ஆத்மான மாலோக்யச சோபமான
மாதர்சபிம்பே ஸ்திமிதாயதாக்ஷீ |
ஹரோபயானேத்வ ரிதாபபூவ
ஸ்த்ரீணும் ப்ரியாலோகபலோஹிவேஷ: |

அவளுடைய தாய் மேனுதேவி அவளுக்கு அழகிய திலகமிட்டுக் களித்தாள். மேனுதேவி உமையை சுமங்கலிகளுக்கு வணங்கச் செய்தாள். அவர்கள் "நாயகனுடைய பிரிவற்ற பிரேமையை அடைவாயாக" என்று வயார வாழ்த்தினர்கள். ஆனல் அவள் அந்த மங்களத்துடன பரமேச்வரனுடைய இணைபிரியாத அர்த்தாங்கியாகும் மகா பாக்கியத்தை யடைந்தாள். (தொடரும்)



"வெண்மையான, சுத்தமான
லக்ஸ் டாய்லட் சோப்பின்
நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம்
கமழ்வது . . ."

என்கிருர் நிருபா ராய்




இந்தியாவில்
தயாரித்தது.



நிருபா ராய் மேலும் கூறுவதாவது: "சுத்தமான, வெண்மையான லக்ஸ் டாய்லட் சோப் ஒன்றுதான் என் சருமத்தை நன்ருக சுத்தம் செய்கிறது. அதன் மிருதுவான நுரை சருமத்தின் துவாரங்களில் புகுந்து மேனியின் இயற்கை அழகை வெளிக்கொண்டு வந்து, ஒரு தனிப்பொலிவை அளிக்கிறது. இந்த சுத்தமான, வெண்மையான சோப் சருமத்திற்கு அளிக்கும் நறுமணத்தையும் நான் மிகவும் விரும்புகிறேன்."

". . . அதனுல்தான் என் சருமத்தை
எழிலோங்கச் செய்ய லக்ஸ் டாய்லட்
சோப்பைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்."

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 410-50 TM

# நவீனத்தின் நாயகன்!

# ஸ்ரீ B. R. ராஜமய்யர்

## சரித்திரம்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" குறள் 236.

என்றார் பொய்யாமொழிப் புலவர். நம் பாரத நாட்டின் பண்பாட்டின் சிறப்பாலும், தவப்பயனாலும் இத்தகைய சிறந்த புலவர் பெருமான்களும், அறிஞர்களும் அழியாச்சுடருடன் அவ்வப்போது தோன்றி ப்ரகாசிக்கின்றார்கள். கவிகளில் பெரும்பாலோரும் உடகண்ப்ரகாசத்தை உடையவர்களாதலால் முக்காலத்தின் சிறப்பையும் உணர்ந்து கவிமலராகக் கொட்டியிருப்பதும் நம் நாடு செய்த பெரும் பாக்யமேயாகும். வள்ளுவர் வாக்கின்படி தோன்றிற் புகழுடன் பிறந்து அவர்களழிந்தபின்னும் புகழ் அழியாது ப்ரகாசிக்கும் முறையில் பிறந்துள்ள வகுப்பினரில் நாம் குறிப்பிடப்போகும் மகத்தான அறிஞரும் ஒருவராவார். வாசகமகனீயர்களில் சிலர் உயர்ந்த மேதைகளின ஜீவிய சரிதம ஏன் வெளியிடவில்லை" என்று கேட்டதற்குச் சென்ற மாத இதழில் கூடிய சீக்கிரம் வெளியாகும் என்று பதில் கொடுத்திருந்தேன். அது எல்லோருக்கும் நினைவிருக்கலாம். மோகினியின் ஆலோசனைக் குழுவினர் கூடி யோசனை செய்ததில் நாவல் உலகத்தையே தனது பேனா வன்மையினால் சிருஷ்டித்து கமலாம்பாள் சரித்திரமென்னும் அமுதத்தைப் பல வருஷங்களுக்கு முன்பே திரட்டிக் கொடுத்த ஸ்ரீ ராஜமய்யரின் சரித்திரத்தையே வெளியிடலாம் என்கிற முடிவு செய்யப்பட்டது. வாசக அன்பர்களுக்கு ஸ்ரீமதி சூடாமணி என்பவரளிக்கும் இந்த விஷயம் ஒரு இனிய விருந்தாக இருக்குமென்று நம்புகிறேன். மோகினியில் தொடர்ந்து வெளியாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கே. சூடாமணி

மதுரைமாநகருக்கடுத்த "பத்துலகுண்ட" என்கிற புனிதமானபெயரைப் பெற்ற ஊர் ஸ்ரீ ராஜமய்யரைப் பெற்ற சிறப்புக்கு முதன்மை ஸ்தானத்தை வகித்தது. பத்துலகுண்ட் என்றால் பக்தர்கள் புனிதமாக நீராடக்கூடிய ஒரு சிறு குளம் —ஏரி— இருந்திருப்பதாக அப்பெயரிலிருந்து புலப்படுகிறது. சில சில பதங்கள் சரியானபடி உச்சரிக்காததால் திரிந்துபோய் "ஹாமில்டன் வாராவதி என்பது அம்பட்டன் வாராவதி என்றும்,

மாமல்லபுரம் என்பது மாவலிபுரம் என்றும், சோளஸிம்ஹபுரம் என்பது சோளங்கிபுரம் என்றும், காளிகட்டம் என்பது கல்கத்தா என்றும் திரிந்துவிட்டதுபோல் பக்துலகுண்ட என்கிற பெயர் "பட்லகுண்டு" என்ற வழக்கத்தில் வந்துவிட்டது என்பது நன்றாகத் தெரிகிறது. இன்னும் சிலர் "வெத்தலகுண்டு" என்றும் உச்சரிக்கிறார்கள். அவ்வூரைச் சார்ந்த ஒரு பெரியாரைக் கண்டு விசாரித்ததில் பக்துலகுண்ட என்பதே அதன் உண்மைப் பெயர் என்றும், காளடைவில் மாறிவிட்ட பெயர்தள் மற்றவை என்றும் விளங்கிற்று.

அத்தகைய புனிதமான பக்துலகுண்டாவில் பிறந்த ராஜமய்யர் சுபாவத்தில் மிகவும் பயந்தவராயும், ஆனால் விடா முயற்சியுடன் எத்தகைய ஸாதனைகளையும் ஸாதித்து முடிக்க வேண்டும் என்கிற உறுதிப்பாடும் கொண்ட அவர் அக்காலத்திய மெட்ரிகுலேஷன் படித்தபின் F. A. வகுப்பும், B. A. வகுப்பும் க்ருஸ்துவக் கல்லூரியில் படித்துத் தேறினார். வெள்ளையரை விரட்டிச் சுதந்திரத்தைப் பெற்றபின்னரும்கூட ஆங்கில மோகம் நம் நாட்டில் இன்னும் சிலருக்கு விடவில்லை. தம் தம் குழந்தைகளைப் பேசும்போதே அம்மா! அப்பா என்பதை மறந்து ஆங்கிலத்திலேயே பேசச் செய்து கேட்டுக் களிக்க வெண்ணி அத்தகைய போதனா முறையுடைய பள்ளிக்கூடங்களில் மாதம் ஐந்து ரூபாயும், பத்து ரூபாயுமாகச் சம்பளம் கொடுத்துச் சேர்க்கிறார்கள் என்றால் ஆங்கில மோகம் தலைக்கேறித் தாய்பாஷை—தாய்நாடு—மதம் முதலியவைகளை மறந்திருந்த அக்காலத்தில் ஆங்கிலப் படிப்பின் தாண்டவத்தில் திரிந்த ஒருசில மைனர்களைப்போல் ராஜமய்யரும் நாகரீகமாய் உடை அணிவதிலும், பகட்டாக இருப்பதிலும் மிக்க ப்ரியங் கொண்டவராம். அதுமட்டுமின்றி, "சாஸ்திரம், சம்பிரதாயம் மதத்தையொட்டி இதைச் செய்ய வேண்டும் அதைச் செய்ய வேண்டும் என்று எழுதியிருப்பதெல்லாம் சுயநலத்திற்காகச் செய்தவைகளாகும். ஜாதி, வர்ணாச்ரமம் முதலியன ப்ராமணர்கள் வேண்டுமென்று செய்தது என்றும், இதனால்தான் நம் நாடு இத்தகைய சீர்கேடான நிலைமைக்கு வந்துவிட்டது. இந்தப் பழக்கத்தை எப்படியாவது ஒழித்தே தீரவேண்டும். எல்லோரும் கூடியவரையில் பிற இம்சை இல்லாத நன்னடக்கைக் கோட்பாட்டுடன் நடந்து வந்தால் இந்த மதம்-கடவுள்—புராணம் முதலிய குருட்டு நம்பிக்கை அடியோடு ஒழிந்து நம் நாடு க்ஷேமமடையும். சகலரும் சுகமாகவாழலாம்" என்கிற அதீதமான நாஸ்திக புத்தி அவருக்கிருந்ததாம். இருந்தபோதிலும் ஒரு விசேஷமான குணம்மட்டும் பிறவியோடு ஒட்டி இருந்ததாம். இந்த இயற்கைக் குணத்தின் சிறப்பினால் மேற்குறித்த நாஸ்திக உணர்ச்சி மனத்தில உதித்தபோதிலும் ஊன்றி வளர்ந்து அதையே தீரமாகச் செய்வதற்கு விடாத

படி ஒரு முட்டுக்கட்டை போட்டுவந்ததால் அத்தகைய சிறந்த
பண்பாடு நிறைந்த குணமும் ஆசையும் எது என்றால் கற்பனை
யும் காவிரிப்பூஞ்சோலைபோன்றதுமான அரிய விஷயங்களைப்
புத்தக ரூபமாய் ஆங்கிலத்தில் வெளிவந்திருந்த—ஷெலி—
வேர்ட்ஸ்வொர்த்—டென்னிஸன் முதலியவர்களின் புத்தகங்
களும்—ஸ்ரீராம சரிதையைக் கவியமுதாகத் திரட்டிக் கொடுத்
திருந்த கம்பர் முதலிய கவிதாமணிகளின் கற்பனையூற்றிலும்
விடாது துளைத்து படித்தறியும் தனிப்பெருமையும் ஊக்கமும்
கொண்டதேயாகும். இத்தகைய காவியப் பூங்காவில் திரிந்து
விஷயரஸ மதுவை உண்டு வண்டு ரீங்காரம் செய்து இன்புற்
றிருப்பதுபோல் தம்மை மறந்து தம்முடைய பழைய கொள்கை
களையும் ஒருசிறிது மறக்கவும் அத்தகைய சிநேகிதர்களுடன்
அதிகமாகப் பழகுவதையும்விட்டு எல்லோரும் ப்ரமிக்கும்படி
ஒரு சிறந்த மாறுதலையடைந்தாராம். இதற்கு முன்பு இவ
ருடைய உற்றார் பெற்றோர்கள் நாஸ்திக புத்தியைக் கண்டு
வருந்திக்கொண்டிருந்த எல்லோருக்கும் அபாரமான மகிழ்ச்சி
உண்டாகி நமது நாட்டின் சிறப்பையும், கடவுள், மதம்
முதலிய பலவிதப் பெருமைகளையும் விவரிக்கும் அரிய புத்த
கங்களையே அவர் படிக்கும்படியான சாதனத்தைச் செய்தார்
களாம்.

B. A. முடித்ததும் சட்டக் கல்லூரியில் படிக்கத் தொடங்கி
னாராம். அவருடைய பழைய மாசு—அழுக்கு அறவே நீங்கப்
பெற்று சரித்திர விஷயமாக உலகமே கண்டு வியந்து போற்றும்
வகையில் தாம் ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட வேண்டும்
என்கிற தடுக்க முடியாத ஒரு தீவிர ஆவல் உண்டாகியதாம்.
நம் நாடு மட்டுமின்றி அமெரிக்கா முதலிய பிறநாடுகளுக்கும்
யாத்திரை சென்று நன்றாக அந்தந்த தேசத்தின் விசேஷ
அம்சங்களை ஆராய்ச்சி செய்து வெற்றிகரமாகத் திரும்பி
வந்து நம் நாட்டின் கலாச்சாரப்பண்பாட்டின் சிறப்பை வெளி
நாட்டாரும், வெளி நாட்டாரின் சிறப்பை நம் நாட்டவரும்
அறியும்படியான முறையில் நூல்கள் எழுதியும், ப்ரசாரம்
செய்தும் தக்க மாறுதல்களை உண்டாக்க வேண்டும் என்கிற
மகத்தான ஆவலைக் கொண்டிருந்தாராம்.

இந்த மனோரதத்தின் உணர்ச்சி நாளுக்குநாள் வளர்ந்து
வரும் காலத்தில் சோதனை என்பது எத்தகைய சாதனையை
யும் சிதைத்துவிடும் என்பதுபோல் முதல்முதல் B. L. பரீக்ஷை
யில் தோல்வி ஏற்பட்டு மகா மேதையாயிருந்த அவரை ஒரே
குலுக்குக் குலுக்கி மனம் இடிந்துவிடும்படிச் செய்துவிட்ட
தாம். அவர் வாழ்நாளில் கண்ட தோல்வியின் அதிர்ச்சி இது
தான் முதல்தரமாகும்.

இந்த முதல் தாக்குதலில் அவருடைய வாழ்க்கைச் சக்கரமே—மனமே—சிறிது மாறியதோடு மதத்திலும், கடவுள் பக்தியிலும் அதிகமான பற்றுதல் உண்டாகிவிட்டதாம். கஷ்டம்வந்துற்ற காலைக் கடவுளின் காலைப்பிடிப்பார் என்கிற பழமொழிப்படிக்கு ஐயரும் பக்தித்யானத்தில் அதிகம் ஈடுபட்டுப் பின்னும் காவியங்களைப் படிக்கவாரம்பித்தார். 'காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே' என்கிற உபதேச மொழி பட்டினத்தடிகளை அடியோடு மாற்றியது போல் B L. தோல்வி என்கிற அதிர்ச்சி அனுகுண்டு ஐயரை அடியோடு மாற்றிவிட்டது என்றால் மிகையாகாது. இதன் பிறகே பலபல புத்தகங்களைப் படிக்கவும், வர்ணாச்ரமதர்மமும் மதமும்தான் சிறந்த சாதனம் என்பது வெகு ஆழமாகப் பதிந்தது. கைவல்ய நவநீதம் தத்வராய ஸ்வாமிகளின் பாடல் அருட்பா, பட்டினத்தார் முதலிய உயர்ந்த நூல்களைப் படித்துப் படித்துப் பின் அவருடைய இதயம் பரிசுத்தமாகிப் பண்பட்டது.

அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டுமென்று கொண்டிருந்த ஆவல் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. தவிர, நம் நாட்டுப் பெருமைகள், நாட்டுக் கலைச்செல்வத்தின் சிறப்புகள், நம் தேச மகிமைகள், ஆங்காங்கு கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கும் கடவுள் ஸன்னிதான தரிசனங்கள், ஸ்தல மகிமைகள் முதலியவைகளைக் கண்டு இன்புற்று அவைகளை உலகம் பூராவும் அறியும்படியாகச் செய்யும்வகையில் புத்தகங்களை எழுத வேண்டும் என்கிற பேராவல் உண்டாகியது.

இந்த சமயத்தில் கணித வித்வான் ஸ்ரீரங்கநாத முதலியார் அவர்களால் இயற்றப்பட்ட 'கச்சிக்கலம்பகம்' என்கிற நூலின் குணகுண விமர்சனம் ஒன்றை எழுதி வெளியிட்டார். அதன் மூலம் இவருடைய எழுத்தின் சக்தி வெளிப்பட்டுப் பாராட்டுக்குரியவரானார். இவருக்குள்ள புகழும் திறமையும், மதிநுட்பமும் ஒருங்கே சேர்ந்து ஏககாலத்தில இவருக்கு ஒரு தனிமதிப்பை நாடு வழங்கி மக்களைப் பூரிக்கச் செய்தது.

(தொடரும்)

ஜகன்மோகினி, 33-வது ஆண்டு 1956
வருடச் சந்தா ரூ. 3
தனிப் பிரதி அணா 4.

# வாழ்க்கையில் ஒரு குறிப்பு

எந்த உலகத்தை உத்தாரணம் செய்வதற்கோ தெரியவில்லை. 1901 வது வருஷம் ஜனவரிமாதம் முதல்தேதி காலையில் நான் பிறந்தேனும் எனக்கு இந்த முதல் தேதிக்கு வருஷத்திற்குச் சரியாக வயதாகிவிட்டது என்பதை நான் ஒருநாள்கூடத் திருப்பி பார்த்ததே இல்லை. என் சிநேகிதர் ராதாக்ருஷ்ணன் வீட்டிற்கு நவம்பர் 12ந் தேதியன்று போயிருந்தேன். அங்கு ஒருகட்டு பத்ரிகைகள் இருந்ததைப் பார்த்து ஒவ்வொன்றாகப் புரட்டும்போது ஜகன்மோகினியையும் பார்த்தேன். வை. மு. கோ. கதைகளில் ஏதோ சிலதுதான் நான் படித்திருக்கிறேன். அவர்களுடைய பத்திரிகையைப் பார்த்ததுகூட இல்லை. அதை அன்று புரட்டும்போது 32-வது வருஷத்து 11-வது இதழ் என்பதைப் படித்தபோது உண்மையில் எனக்கு ஒரு அதிர்ச்சி உண்டாகியது. 56 வருஷத்திற்கு எட்டிப் பார்க்கும் நான் 32 வருஷ கால மோகினியின் ஸேவையை அறியாது இருந்தோமே என்று எண்ணி வெட்கினேன். தவிர "வாழ்க்கையில் ஒரு குறிப்பு" என்ற தலைப்பின் கீழ் அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்கிற தலைப்பைப் பார்த்ததும் விருவிறென்று படித்தேன். அவரவர்களுடைய வாழ்நாளில் நடந்த ஒரு விஷயத்தை எழுதும் அபூர்வமான கருத்துடைய பத்தி இது என்று அறிந்துகொண்டேன். சில பழய மோகினி ப்ரதிகளையும் வாங்கி அந்த பத்திகளை மட்டும் ஒரே மூச்சில் படித்துவிட்டேன். எனக்கு பூர்த்தியாகிய இத்தனை வயது காலத்தில் எத்தனையோ அனுபவங்கள் நிறைந்திருக்கிறதே அதையும் ஏன் எழுதக்கூடாது என்று தோன்றியதால் எழுதத் துணிந்தேன்.

மந்திரம், தந்திரம் முதலியவைகளில் எனக்கு என்றுமே நம்பிக்கை அதிகம். அந்த எண்ணத்தை ஊர்ஜிதப்படுத்தும் ஒரு சம்பவத்தை மட்டும் இங்கு எழுதுகிறேன். நான் பி. ஏ. வகுப்பில் சேர்வதற்கு முன்பே கல்யாணமாகிவிட்டது. இந்த காலத்தைப்போல் பிள்ளைகள் உத்யோகம் செய்தபிறகு கல்யாணம் செய்வது என்பது அந்த காலத்தில் இல்லை. எனக்கு 17 வயது; என் மனைவிக்கு 7 வயது; 10 வயது வித்யாஸம் அந்த காலத்தில் ஸர்வ சகஜம். எனக்கு 24வது வயதில் என் மனைவியை என்னிடம் ஒப்படைத்தார்கள். பெண் கல்வி அதிகமில்லாத காலம். ஸினிமா என்கிற பிசாசே இல்லாத காலம் நாங்களிருவருமே வெகு சங்கோஜிகள். நேருக்கு நேர் நிற்கக்கூட மாட்டோம். அப்படிப் பட்டவர்களை விதி ஒருநாள் வலிய அழைத்ததுபோல என்

னுடைய மாமா எங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். அப்போது ட்ராமா தான் அடிக்கடி நடக்கும். எங்க மாமாவுக்கு யாரோ இனம் டிக்கட்டுக் கொடுத்தார்களாம். அதைக் கொண்டு எங்கள் எல்லோரையும் அழைத்துச் சென்றார். அக்காலத்தில் நாடகம் பார்க்கப்போவது என்றால் மிகமிக இளப்பம். அதைப்பற்றி வம்பு பேசுவது கொஞ்சநஞ்சமல்ல. அப்போது இந்த காலத்தைப்போல் அமெச்சூர் நாடகம் அதிகம் கிடையாது. சுகுண விலாஸ சபா ஒன்றுதான் உண்டு, அதில் பணக்காரர்கள்தான் அதிகம் போவார்கள். நாடகம் என்றாலே கூத்தாடிகள், என்றும் அதைப் பார்க்கிறவர்கள் கெட்டுவிடுவார்கள் போகக்கூடாது என்றும் கண்டிப்பார்கள்.

ஏதோ விதிவசத்தால் அன்று போய்வந்தோம். நாடகமோ! ஜில்ஜில் சதாரம். நடராஜ ஆசாரி என்பவன் குதிப்பதும் தில்லாலங்கடி பாடுவதும் கீழ்த்தரமாகப் பேசுவதும் அக்காலத்தில் வெகு வெகு உயர்வு. அதன் கேவலம் பின்னால்தான் தெரிந்தது. மாமா ஒருமாதம் லீவில் எங்கள் வீட்டிலிருந்தார். அவர் திரும்பிப் போவதற்குள் பத்துப்பதினைந்து நாடகத்திற்குப் போய் வந்துவிட்டதன் விபரீதம் எங்க மாமா ஊரைவிட்டுப் போவதற்குள்ளேயே உரத்த குரலில் பேசாது அத்தனை சாதுவாக இருந்த என் மனைவி ஒருதினம் திடீரென்று காணாது போய்விட்டாள் என்பதை வெகு துக்கத்துடனும் வெட்கத்துடனும் எழுதுகிறேன். வெகு அழகாக இருக்கும் என் மனைவியினிடம் எங்கள் குடும்பமே பெரிய மதிப்பும் ஆசையும் வைத்திருந்தது. ஊரெல்லாம் தேடினோம். நாட்கள் ஒன்றிரண்டு என்று ஓடி ஒருவாரமாகி விட்டது. அவமானம் தலைகாட்டமுடியவில்லை. ஒரு ஜோஸியனைக் கேட்டதற்கு அவள் நாடகக் கம்பெனியில் சேர்ந்து விட்டாள் என்று பட்டவர்த்தனமாகச் சொல்லியபோது எங்களுக்கு எப்படித்தானிருக்கும்! நான் சொல்லாமல்கொள்ளாமல் இந்த அவமானம் தாங்காது கண்காணாத தேசமாகிய ரங்கூனுக்கு ஓடிவிட்டேன். சுமார் பத்து வருஷகாலம் அங்கேயே ஒரு சிறியவேலை சம்பாதித்துக்கொண்டு அங்கிருந்தேன். அந்தப் பாவிப் பெண் நாடகத்தில் சேர்ந்து ஆடிப் புகழ்பெற்றுவிட்டதாகக் கேள்விப்பட்டு இடிந்து போனேன்.

என் பெற்றோரும் இந்த அதிர்ச்சியினால் குன்றிவிட்டனர். என்னையே எண்ணி எண்ணி ஏங்கித் தவிப்பதாக எப்படியோ அறிந்துகொண்டேன். சுமார் 12 வருஷங்கள் கழித்து நான் மறுபடியும் என் பெற்றோரிடம் வரும்போது என் தாயைப் பறிகொடுத்துவிட்ட துக்கத்தை அனுபவித்தேன். உலகமே எனக்கு வெறுப்பாகிவிட்டது. நான் என் மாமாவை பரம

சத்ருவாக எண்ணி அவரிடம் பகைமையே கொண்டேன். விதி வாழ்க்கைப் பாதையைச் சிறிது மாற்றியது. மாமாவின் பெண்ணையே எனக்குக் கொடுத்துக் கல்யாணத்தைக் கட்டாயமாகச் செய்து முடித்தார்கள். முதலில் கிடைத்த ஏமாற்றத்தினால் பிறகு வாழ்க்கையில் ருசி ஏற்படாமல் பயமே தலை தூக்கி வளைத்தது. நாளடைவில் பழைய பயங்கரத்தை ஒருவாறு மறக்க முயன்றேன் என்றாலும் நாடகம் என்ற பெயரைக் கேட்டாலே தூக்கிப்போடுகிறது. ஆதிகால நாடகத்தை ஒருவாறு வெறுக்கும் எனக்கு இக்கால சினிமா உலகம் இன்னும் விபரீத பயமாகவே இருக்கிறது. பல பெண்கள் சினிமா பார்ப்பதுடன் கெட்டுப் போவதல்லாது தாமே நடிக்கவும் போய்விடுவது சகஜமாகி வருகிறது. மகா புண்ய பூமியாகிய நமது இந்தியாவில் இத்தகைய நாச விளைவுகள் என்றுதான் மறையுமோ தெரியவில்லை. இதுபோல் இன்னும் எத்தனையோ இருக்கிறது. எழுதினால் பெருகும்; விரஸமாகவும் போகும். சின்ன பெண்களை நாடகம் பார்க்க அனுப்பக் கூடாது என்று பெரியவர்கள் சொல்லிய தேவவாக்குப் பலித்துவிட்டது. அது பொய்யே இல்லை என்பதைக் கூறவே இதை எழுதினேன்.

—"உண்மை விளம்பி"

---

# அறிவுப் போட்டி நெ. 4.

கல்யாணத்தில் அதிமுக்யமான விஷயங்களில் 5 விஷயங்கள் கீழே இருக்கும் ஆறு வரிகளுக்குள் அடங்கி இருக்கின்றன. வழக்கப்படி வரிக்கொரு அக்ஷரவீதம் கண்டு பிடித்து கூப்பனிலேயே கோடிட்டு அனுப்புவதோடு தனித் துண்டு காகிதத்தில் பூரா விடையும்—விலாஸமும் எழுதியனுப்பவும்.

1—சுகாதாரம் கெடுதலை அகற்றுமா?
2—பகைவரையும் கஷ்டங்களில் கைவிட்டு விடக் கூடுமா?
3—கலங்குவார்களைக் கடிந்தால் மன்னிப்பு உண்டா?
4—மேகம் போல் நம்மால் நன்மை வர்ஷிக்க முடியுமா?
5—ஊனமுள்ள மனிதன் தைர்யமாய்ப் பலருடன் சேர்வானா.
6—சுயமதி இல்லாதவன் சும்மா இருப்பானா?

சரியான விடை அடுத்த இதழில்.

# அன்பும் அருளும்

T. C. K. மல்லிகைசுந்தரம்

வங்காளக்குடாக் கடலில் உருவாகிய புயல், தமிழ் நாட்டை நோக்கி திக்விஜயம் செய்தது. பகலெல்லாம் சுமாராக அடித்த காற்றும், மழையும் சாயங்காலம் ஆக, ஆக தன் வலிமையை முழு பலத்துடன் காட்டியது. திக்குத்திக்காந்தங்களெல்லாம், இடிந்து விழுவதுபோல கொட்டி இடித்தது மேகம். "ஹூய், ஹூய்" என ஊளையிட்டுச் சாடியது காற்று. வானத்தை வெட்டிப் பிளந்தது மின்னல். பெரிய, பெரிய மரங்களெல்லாம் வேரோடு பெயர்ந்து விழுந்தன. தகரங்களெல்லாம் காகித அட்டைகளெனப் பறந்தன. கூரைகள், குடிசைகளின் கதியெல்லாம் அதோ கதி என்பதைக் கூறவும் வேண்டுமோ!

அச்சமயம் ஊர்க்கோடியிலுள்ள முக்குறுணிப் பிள்ளையார் கோயிலண்டையிலுள்ள அச்சிறு குடிலின் சொந்தக்காரனான சுப்பன் புயலின் அட்டகாசங்களைப் பார்த்தும், உணர்ந்தும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு அமர்ந்திருந்தான்.

அவன் வாய் நிமிஷந்தோறும் "கடவுளே!" என்று ஆபத்பாந்தவனை அழைத்துக்கொண்டிருந்தது.

சென்ற மாதம்தான் அவன் அக்கூரையை வேய்ந்திருந்தான். உடம்பிலுள்ள ஒவ்வொரு சொட்டு ரத்தத்தையும் நீராக்கி உழைத்துக் கொஞ்சம் ரூபாய் சேர்த்துக்கொண்டான். போதாததற்கு, கொஞ்சம் கடனும் வாங்கி கூரையை வேய்ந்தான். உடலில் பலமும், உள்ளத்தில் திண்மையும், உழைப்புக்கு அஞ்சாதவனுமாதலால், சில மாதங்கட்குள் கடனை அடைத்துவிடலாமென்ற நம்பிக்கை அவனுக்குப் பூரணமாக இருந்தது. அப்புறம் நாலைந்து வருடங்கட்கு கவலையில்லையல்லவா!

ஆனால் அவன் நம்பிக்கையைச் சிதறவடிக்கவென்றே பாழும் புயல் கூற்றம் என வந்துவிட்டதே! அதைத்தவிர, பிள்ளையார் கோயிலுக்கும், அவன் குடிலுக்கும் இடையே பிரம்மாண்டமானதொரு வேப்பமரம் இருந்தது. அதன் ஒரு கிளை முறிந்து விழுந்தாலும், இந்த மண் குடில் தரைமட்டமாகிவிடுமே!

சற்றுமுன் புயலுக்காக அவன் குடிசையில் வந்து தங்கிச் சென்ற இரண்டொரு வழிப்போக்கர்கள் கூறியது அப்பொழுதும் அவன் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது. "எமனோலை வாராமலேயே எமன் வீட்டுக்கு விருந்தாளியாகப் போக வேண்டுமானால், இந்தத் தம்பி குடிசையிலே இன்னும் கொஞ்ச நேரம் தங்கினால் போதும். பெண்ஜாதி பிள்ளைகளிடம் பயணம் சொல்லிக்கொள்ளாமலேயே கண்மூடி கண் திறப்பதற்குள் போய்ச் சேர்ந்துவிடலாம். பிரயாணமும், கஷ்டமாக இராது" என்று ஹாஸ்யமாகக் கூறிவிட்டு, வழிப்போக்கர்கள் பிள்ளையார் கோயிலில் போய் ஒண்டிக்கொண்டனர். போகும்போது அவர்கள் சுப்பனையும் வரும்படி வற்புறுத்தினர். ஆனால் சுப்பன் செல்ல மறுத்துவிட்டான்.

அவன் உயிர் பிழைத்துக்கொள்ள வேண்டுமெனில், பத்தடி தூரத்திலுள்ள பிள்ளையார் கோயிலில் போய் ஒண்டிக்கொள்ளலாம். புயல் அதை அசைக்க முடியாது. மரம் வேரோடு பெயர்ந்து விழுந்தாலும், தாங்கிக்கொள்ளும். அவன் உயிருக்கும் ஆபத்து இல்லை. ஆனால், அவன் உயிரோடு ஒன்றிய அச்சின்னஞ்சிறு குடில், மூன்று தலைமுறைகளைப் போஷித்து, வளர்த்து, அவர்களின் சுகதுக்கங்களில் மௌனமாகப் பங்கெடுத்து, மூன்று தலைமுறைகளின், அபிமானத்திற்கும், நேர்மையான கௌரவத்திற்கும் சாட்சியாக நின்ற அந்த நான்குபுறத்துச் சுவர்கள், அவைகளை அநாதரவாக ஆபத்காலத்தில் விட்டுச்செல்வது, கைப்பொருளற்ற காலத்து கணிகைதன் ஆசைநாயகனை துறப்பதை ஒக்கும்'' என எண்ணினன். ''உயிர் பிழைப்பதற்காகவாவது நான் என்னை வளர்த்த தாய்க்குடிலைவிட்டுப் போக மாட்டேன்'' என உறுதி செய்துகொண்டான். அவன் மனத்தில் படர்ந்திருந்த பீதி அவ்வுறுதிமுன் நிற்கமுடியாமல் ஊளையிட்டுச் சென்ற காற்றோடு கலந்து போய்விட்டது. கதவு தட்டும் சத்தம் கேட்டுத் திறந்தான்.

''நீ யார் தங்கச்சி? இந்தப் புசல் காற்றிலே எங்கே புறப்பட்டே?'' அவள் அவனை நிமிர்ந்து நோக்கினள். அவனது கபடற்ற பார்வை, கனிவான பேச்சு, புன்னகை பூத்தவதனம். அவளுக்கு அவனிடம் அஞ்சவேண்டியதில்லை என்ற உள்ளுணர்வு ஏற்பட்டது. ''நா......ன்...நா......ன......'' அவள் பற்கள் தந்தி அடித்தன. கடுங்குளிரினலும், வெகுநேரமாக மழையில் நனைந்ததனலும், அவள் தொண்டையிலிருந்து சப்தம் எழும்பவில்லை.

காற்றின் உற்சாகம் கரைகடந்து போயிற்று. கூரை மூலையின் ஓர் பாகத்தைப் பிய்த்துக்கொண்டு சென்றது. அவ்விடுக்கு வழியாகத் தாராளமாக உள்ளே புகுந்த காற்று, 'பொக் பொக்'' கெனப் புடைத்துக்கொண்டிருந்த விளக்குக்குக் கூற்றமாகியது. அவன் மிக ஜாக்கிரதையாக மறுபடியும் விளக்கை ஏற்றித் தொம்பைக்கு மறைப்பில் வைத்தான.

பாதாதிகேசபரியந்தம் அவளைக் கண்களால் ஆராய்ந்தான் சுப்பன். உழைத்து உரமேறி பூரண வளர்ச்சியுடன், பளபளத்த கருத்ததிருமேனி, மானத்தைமட்டிலும் காக்க உதவிய மட்டரகப் புடவை, ரவிக்கை போட்டு அறியாத வாளிப்பான சரீரம் எல்லாம் அவனுக்கு அவளது உண்மையான நிலைமை உணர்த்தியது. அவள் நின்ற இடத்தில் சொட்டிய தண்ணீர் சிறு வாய்க்காலாக ஓடிவந்தது. அவள் நடுங்கிக்கொண்டிருந்தாள். ஏழைக்கு ஏழை இரக்கம் இல்லாது போய்விடுமா!

பெரிய பண்ணையார் வீட்டுக் கல்யாணத்திலே விறகு உடைத்துப் போட்டதற்காக அவனுக்குப் பரிசாகக் கிடைத்த சேலம் குண்டஞ்சி வேஷ்டியையும், கைலித்துண்டையும், ஒரு குட்டிச் சாக்கில் போட்டுக்கட்டி கூரைவிட்டத்தில் தொங்கவிட்டிருந்தான். அவைகளை எடுத்து அவளிடம் மௌனமாக நீட்டினன். அவள் தயங்கினள்.

''வாங்கிக்கோ தங்கச்சி! வாழ்வுக்கும் சாவுக்கும், இப்பவோ பிள்ளையோ, இன்னும் சற்று நேரமோ என்று இருக்கிறப்போ,

ஏன் லஜ்ஜைப்பட்றே அம்மா!'' அவன் குரலில் கனிவும், கண்ணொளியில் மனிதப்பண்பும் சுடர்விட்டது. அவள் நடுங்கும் கரங்களால் அவைகளைப் பெற்றுக்கொண்டு தலை குனிந்தாள். அக்குறிப்புணர்ந்து முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டான்.

அவள் உலர்ந்த துணியை உடுத்திக்கொண்டபோதிலும், வெகு நேரமாக மழையில் நனைந்துவிட்டதால் உடல் நடுக்கம் நிற்கவில்லை. கை கால்களெல்லாம் 'குறக்குளி' பிடித்துக்கொண்டது போல் மறத்து இழுத்தது.

''அடடா! இப்படி நடுங்குகிறயே தங்கச்சி! ரொம்ப நேரம் மழையிலே நனைஞ்சுட்டே போலே இருக்கு, உம்...... துவரைமார் கூட இரண்டு கட்டு திண்ணையிலே அடுக்கி வைத்திருந்தேன். எல்லாம் நனைஞ்சு போச்சு. இருந்தாலும், கொளுத்தியாவது சூடுண்டாக்கலாம்,'' என்று கூறிக் கொண்டே, மூலை ஓரமாக இருந்த தொம்பைகளை நகர்த்தி வைத்து அவள் உட்காருவதற்கு இடவசதி செய்து கொடுத்தான்.

விளக்கை சற்று தூண்டிவிட்டு அவனும் அவளுக்கு எதிர்ப்புறமாக உட்கார்ந்தான்.

''எங்கேயிருந்து வர்றே தங்கச்சி?''

''நா...ன்...நான்'' அவள் பற்கள் நாவோடு ஒத்துழைக்க மறுத்து விட்டன.

''அடடா இன்னும் நடுக்கம் தீரலையா? அவளால் நாலு வார்த்தைகள் திணறுமல் பேசமுடிந்தது.

அவளுக்கு பக்கத்து ஊர். ஏதோ கூலிவேலை செய்து ஜீவனம் செய்து வந்தாள். தாய் தந்தையற்ற அவளை வளர்த்த பாட்டி, தனது எட்டடி சதுரக் குடிசைக்கு அவளை சர்வாதிகாரிணியாக்கி விட்டு சென்ற வருடம் காலமாகி விட்டாள். அவளது கன்னிப் பருவம், தனிமை, அவ்வூர் மனச்சாட்சியற்றகாளைகளின் கண்களில் முள்ளாய் உறுத்தியது. வாழைத் தோட்டத்திற்கு வேலி இல்லாவிட்டால். மாடுமேய்வதற்கு கேட்கவா வேணும்! சாம, தான, பேத தண்ட முறைகளில் முயற்சி செய்தனர். அவள் மறக்குலப் பெண். மனைவியாயிருக்கச் சம்மதித்தாளே யன்றி, ''வைப்பாக'' இருக்கச் சம்மதிக்கவில்லை. மறக்குலவாலிபர்கள் எவரும் அவளை மனைவியாக ஆக்கிக் கொள்ள முன் வரவில்லை. காரணம், அவளது தாயார் விதவையின் பெண்ணுதலால் அவ்வூரார் மூன்று தலைமுறையாக அவள் வீட்டாரை ஜாதிப்ரஷ்டம் செய்து வைத்திருந்தனர். ஆனல். சமூகநீதி பேசி பாமர மக்களின கண்களில் மண்ணைத் தூவும் ஜாதிய கௌரவமிக்க அவ்வூர் மிராஸ்தார் சொக்கலிங்கம் முதல் சிவன கோவில் குருக்களையா வரை அவளை ஆசை நாயகியாக ஏற்றுக்கொள்ள துடிதுடித்தனர். அவளோ தூர்த்தர்களிடம் நெருப்பாக எரிந்தாள். நாகமாகச் சீறினள், கயவர்களின் ஜம்பம் சாயவில்லை. ஆயினும், உள்ளத்தில் 'கறுவு' வைத்துக் கொண்டு சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். புயல் நல்லதோர் சந்தர்ப்பத்தை அளித்தது போலும். ஊருக்குப் ஒதுக்குப்புறமாக இருந்த குடிலில் புயலுக்கு அடைக்கலம் புகும்

சாக்கில், ஒருவன் அவள் மீது ஆக்கிரமித்தான். தனது வலிமையை பிரயோகிக்க முற்பட்டான். அவளுக்கு மானம் பெரிதாகத் தோன்றியதேயன்றி உயிர் பெரிதாகத் தோன்ற வில்லை. தனது பற்களைப் பிரயோகித்து, எப்படியோ சாமர்த்திய மாகத் தப்பித்துக் கொண்டு எடுத்தாள் ஓட்டம் நிற்காமல் நிலைக்காமல் புயலோடு புயலாக. அவ்வூர் எல்லையைத் தாண்டிய பிறகுதான், அவளுக்கு எங்காவது மழைக்கு ஒதுங்க வேண்டு மென்ற உணர்வே உண்டாயிற்று.

மின்னொளியில், சுப்பனின் குடிலைப் பார்த்ததும், அவள் சிறிதும் யோஜியாமல் உள்ளே புகுந்து விட்டாள்.

நகரமக்கள் பெரும்பாலோருடைய வாழ்க்கையில் உள்ளத் திற்கும், உதட்டிற்கும் இடையே திரை ஒன்று இருக்கும். அதனால் உள்ளத்தில் உளளது உதட்டில் வராது. சொல்லில் உளளது செயலில் வெளிபபடாது. ஆனால், கிராமிய மக்கள் பெரும் பாலோருடைய வாழ்க்கையில்,சிந்தை, செயல், சொல் மூன்றிறகும் இடையே திரையோ, தடையோ இல்லாமல், உண்மையும, எளிமை யும், தூய்மையும் ஒரே நிலையாக விளங்கும்.

"ஏன் தங்கச்சு! தனிமையிலே என்னைக் கண்டதும் முதல்லே பயந்துட்டேல்லியா?" என்று கேட்டான.

"முதல்லே கொஞ்சம் பயந்துட்டேன் தான். அப்புறம் பயந்தோணலே.

"ஏனும்?"

"ஏனோ!"

சுப்பன் கடகடவெனச் சிரித்தான். அவனை அவள் கண் கொட்டாது நோக்கினாள். அவனது கவடற்ற நகைபபு, மெனமை யான கௌரவம், பட்சமான உளளம, அவள் மனததைப பெரிதும் கவர்ந்தது. மினனல் வெட்டியது. அவளது பார்வை கூரை முகட்டில பதிந்தது. பீதியால அவள் கணகள மருண்டன.

"ஐயோ!, அப்பா! அந்த மரம் பேயாட்டம் ஆடுதே! வேரோடு பெயர்ந்து விழுந்தால்...?" அவள உடல் சிலிர்ததது.

"சோற்றை மறந்திடுவோம்". அவன் இடி இடியென்று சிரித் தான். அவனது சிரிபபு அவளுக்கு அதிசயமாக இருந்தது. மிருத்யு பிடரியில் உட்கார்ந்து அழுததுமபோதுகூடக் கலங்காத நெஞ்சும், தைரியத்தை இழக்காது அலட்சியமாக எதிர்நோக்கும் தனிபபண்பும் அவளுக்கு அதிசயத்திலும அதிசயமாகவிருந்தது. மனதிற்குத தெமபாகவும இருந்தது. அதுமட்டுமா! ஏதோ ஒரு இனந்தெரியாத இனபங் கலந்த வேதனையும கூடவே பிறந்தது.

அவன் சிரிப்பதைவிட்டு பிடித்திருந்த அவளது கையை பர பரப்புடன் உதறிவிட்டு, எழுந்தவன கூரைமுகட்டை அண்ணாந்து நோக்கினான்.

"தங்கச்சி! ஓடிப்போய் உயிர் பிழைச்சுக்கோ அம்மா! அதோ தெரியுது பார் பிள்ளையார் கோவில்!" என்று கூறிக்கொண்டே

கதவைத் திறந்தான். சாறல் அவன் முகத்தில் அடித்தது. அவள் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. அவன பதட்டத்தைப் பார்த்து குறும்பாகச் சிரித்தாள். ஆம். வேதனை கலந்த சிரிப்பு.

"என் உசிறுமட்டும் வெல்லமா? நீங்களும் வாங்க!"

"ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு தங்கச்சி! மூணு தலைமுறையா எங்க உசிருக்கு உசிரா இருந்த இந்தக் குடிசையை, ஆபத்துக் காலத்திலே அநாதரவா விட்டுட்டு நான் வரமாட்டேன. நீ போ அம்மா! இந்தக் குடிசை பொழுது வடியுமட்டும் தாங்காது." மண்ணுக்கும மனிதனுக்கும் உளள உறவின சூட்சுமத்தை அறிய வேணடுமெனில், உழவர் வாழ்க்கையிலிருநதுதான அறிந்து கொளள வேண்டும.

"உங்களுக்கு ஆகிற விதி எனக்கும் ஆகட்டும்." பொது விதியொனறால் பிணைக்கபபட்ட பிணைப்பானது பிறப்பினால் ஏறபட்ட பிணைப்பைவிட நெருங்கியதன்றோ!

"என்ன!" அவன் வாயடைத்துப் போய்விட்டான் ஒருகணம். பிறகு கடகடவெனச் சிரித்துக்கொண்டே, 'வாழ்க்கைக்குத்தான் துணை வேணும்பாங்க உலகத்திலே; நீ சாவுக்கில்லே துணை வந்திருக்கே தங்கச்சி!" என்றான.

அவன் சொல்லி வாய் மூடவில்லை. மரம் முறிந்துவிழும் பேரொலி கேட்டது. இருவரும ஒருவர்க்கொருவர் கொந்தளிப்பான பார்வையைப பரிமாறிக்கொண்டனர். பீதியினால், ஒரு நிமிஷம் பேசவோ, இயங்கவோ சக்தியற்றுக் கிடந்தனர். அடுத்த கணம, திக்கெட்டும வெடித்து சிதறி அவர்கள் தலைமேலேயே விழுந்ததுபோன்ற உணர்வு உண்டாயிற்று. செவிபபுலன்களில் இயக்க சக்தியே இல்லாமல் அடைத்துக்கொண்டன. ஹிருதயம் கூட ஒருகணம் இயங்காமல் அப்படியே நின்றுவிட்டது. அடுத்த கணம அவர்கள உதட்டிலிருந்து ஏககாலத்தில் ஒருவித வீறிடல் வெடித்தது.

"இடி!" "இடி!!" "இடி!!!"

பலியாகப் போகிற அவ்விரு ஆத்மாக்களும் சாவின் தலைவாயிலில் நினறன.

பலபலவென்று பொழுது விடிவதற்கு முன்பே, புயல் அடங்கி, எங்கும பேரமைதி பரவியிருந்தது. புயல் செய்துவிட்டுப் போன பயங்கரமான கோலாகலத்தைப பார்ப்பதற்காக ஊர்மக்கள் திரண்டனர். ஆச்சர்யம், அனுதாபம், விசனம் எல்லாம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அலைமோதியது.

சுப்பன் குடில் என்றும்போல நின்று நிலைத்து எளிமை கலந்த கம்பீரத்துடன காட்சி அளிப்பதைப் பார்க்க யாவரும வியப்புற்றனர். பக்கத்திலிருந்த மரத்தினமேல் இடிவிழுந்து அது இருந்த சுவடே தெரியாமல் எரிந்து போயிருந்தது. பிள்ளையார் கோவில் கருங்கல் சுவர்கூட ஒருபக்கம் இடிந்து சரிந்திருந்தது. ஆனால், பழையகால மண்சுவர், அது பத்திரமாக இருந்தது. அந்த சுவருக்குள்ளே, இருந்தது பவித்ரமான அன்பு. நேர்மையான உள்ளம், இரக்க சிந்தை. அனபு இருக்கிற இடத்திலே இறைவனின அருளும் இருந்தது. சுபபனும், அவனது குடிலும, அவனை ஆச்ரயிதத அந்தப பெணணும தபபித்துக் கொண்டனர்.

சுப்பன் முதலில் கண்விழித்தான். பிறகு அவளும் கண்விழித்தாள். இருவரும் ஒருவரையொருவர் வியபபுடன நோக்கினர். அவனுக்கு உணர்வு திரும்பியது. அவளுக்கும் பிரமை தெளிந்தது. அவன் எழுந்து சென்று கதவைத் திறந்து வெளியே பார்த்தான. அவளும் அவனைப் பின்தொடர்ந்தாள். வெளியே ஊர்மக்கள் கூடி பிள்ளையார் கோவில் இடிபாட்டிலிருந்து இரு ஆடவர்களைக் குற்றுயிரும் குலையுயிருமாக அகற்றிக்கொண்டிருந்தனர். சுப்பனையும, அவனது மண் குடிசையையும எல்லோரும பார்த்து வியந்தார்கள்.

அன்பு இருக்கும் இடத்தில் கடவுளின் அருளும் இருக்கிறது. இதற்கு சுபபனின குடிசையே சாட்சி என்று பொதுஜனங்கள் ஆரவாரித்துப் பேசிய பேச்சு சுப்பனின் இதயத்தில் பாய்ந்து பூரிக்கச் செய்தது. தங்கச்சியாக வந்த பெண்ணை அவ்வூர் ஜனங்களே சுபபனின வாழ்க்கைத் துணையாக்கி மண் குடிசைக்கு இன்னும புகழையும உரத்தையும கொடுத்தார்கள் என்றால் வியபபேது.



# பிதுரார்ஜித சொத்து

லக்ஷ்மணபுரியில் பல பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்களில் ஒருவன் நரசிம்மன். அவன் ஏழையுமல்ல, பெரிய பணக்காரனுமல்ல. அவனுக்கு மனைவி கிடையாது. மூன்று பிள்ளைகளே இருந்தனர். அவர்கள் பெயர் முறையே, தாமோதரன், பத்மநாபன், ரவீந்த்ரன். நரசிம்மனுக்கு வயது 70 ஆகிவிட்டது. அதனால் அவனுக்கு மிகவும் தள்ளாமையாக இருந்தது. எனவே ஒருநாள் தனது மூன்று பிள்ளைகளையும் அழைத்து, பிள்ளைகளே நான் உங்கள் மூவருக்கும் சொத்தாக ஒரு வீடுதான் வைத்திருக்கிறேன். மேலும் நான் ஒன்று கொடுக்கிறேன். அதை நீங்கள் பிதுரார்ஜித சொத்தாக நினைத்துக் காப்பாற்ற வேண்டும் என்று கூறி ஒரு சாத்துக் கொடியைக் கொடுத்தான். அதை அந்தப் பிள்ளைகள் மூவரும் சந்தோஷமாகப் பெற்றுக் கொண்டனர். சிறிது நேரத்திற்கெல்லாம் நரசிம்மனின் ஆவி உடலைவிட்டுப் பிரிந்தது.

தாமோதரன் பத்மநாபன், ரவீந்தரன் மூவரும் தன் தந்தையிடம் மிகவும் அன்புடையவர்கள். அதனால் அவர்களது தந்தை கொடுத்த சாத்துக்கொடியை எல்லோரும் பார்க்கும்படியான இடத்தில் வைத்து பாதுகாத்து வந்தனர். பல நாட்கள் சென்றதும் சாத்துக்கொடி அழுக ஆரம்பித்தது. இன்னும் சில நாட்கள் சென்றதும் நன்றாக அழுகி துர்நாற்றமடிக்கத் துடங்கியது. அதனால் அப்பழத்தைக் கொசுக்கள் மொய்க்க ஆரம்பித்தன. இதைப் பார்த்த மூன்று பிள்ளைகளும் என்ன செய்யலாம் என்று யோசித்தனர்

ஒரு நாள் மூன்றுபிள்ளைகளிலும் பெரியவனாகிய தாமோதரன், நாம் இதை இத்தனை நாளாக வைத்துக் காப்பாற்றியதைப்போலவே இது அழிந்துபோகும்வரை காப்பாற்றலாம். இதனால் நமக்கு வியாதி வந்தாலும் சரி, துர்நாற்றமடித்தாலும் சரி, இறந்து போவதாயிருந்தாலும் சரி, இதை நாம் காப்பாற்றியே தீரவேண்டும். நம் தந்தை நல்ல புத்திசாலி. அவரைவிட நாம் புத்திசாலிகளல்ல. அவர் காரணமின்றி இதைக் கொடுத்திருக்கமாட்டார். ஆகையால் நம் தந்தைக்கு விரோதமாக எதையும் செய்யவேண்டாம் என்று கூறினான்.


இரண்டாவது பிள்ளையாகிய பத்மநாபன், இந்த சாத்துக் கொடியை எறிந்துவிட்டு, பக்கத்து வீட்டிலிருந்து மற்றொரு சாத்துக்கொடியை வாங்கிக்கொள்ளலாம். இது வீட்டிலிருந்தால் வியாதி கிருமிகள் பரவி வியாதிவரும். மேலும் இதை வைத்திருப்பது நமக்கு அழகன்று. பிறர் இதைப் பார்த்து பரிகசிப்பர். புதிய சாத்துக்கொடி இதைப்போல் அழுகினதாக இருக்காது என்று கூறினான்.

மூன்றாவது பிள்ளையாகிய ரவீந்தரன் மிகவும் புத்திசாலி. அவன் ஒரு யோசனை கூறினான். அதாவது இந்த சாத்துக் கொடியை எறிந்து விடலாம். ஆனால் எறிவதற்கு முன் அதி

ளுள்ள கொட்டைகளை மட்டும் எடுத்துக்கொள்ளலாம். அதை நம் வீட்டுத் தோட்டத்தில் நட்டால் பல இனிப்பான சாத்துக் கொடியைப் பெறலாம். சாத்துக்கொடி அழுகிப்போகும் வரையில் வைத்துக் கொண்டிருந்தால் அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் பரிகசிப்பார்கள். மேலும் நமக்கும் கொடிய வியாதி வரும். இதனால் மானத்தை இழக்க நேரிடும். இப்பழத்தை அநியாயமாக எறிந்துவிடுதலும் நல்லதன்று. அப்படி எறிந்தோமானால் நமது பிதுரார்ஜித சொத்தை இழந்தவர்களாகி விடுவோம். புதிய பழத்தை வாங்கலாம் என்றால் அதற்கு பணம் செலவு செய்யவேண்டும். அப்படி வாங்கினாலும் அது நம்முடைய சொந்த பழமாகாது. மேலும் அதுவும் சில நாட்கள் இருந்தால் அழுகிப் போய்விடும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படவேண்டுமென்றால் புதிய புதிய விஷயங்கள் தோன்றிக்கொண்டே இருக்கவேண்டும். அவ்வாறு புதிய விஷயங்கள் தோன்றுவதிலேதான் வாழ்க்கையின் சாராம்சம் இருக்கிறது. பழைய கொட்டைகளிலிருந்து புதிய செடிகளை உண்டு பண்ணுவோம். ஒரு விதை மரமாகி பல கனிகளைக் கொடுக்கிறது. இதுபோல் நம்குடும்பமும் பெருகி பிதுரார்ஜிதமாகிய இந்த இனிய சாத்துக்கொடியைச் சாப்பிட்டு களிப்புடன் வாழவேண்டும் என்று பிரசங்கம் செய்வதுபோல் கூறினான். இவனது யோசனையை தாமோதரனும், பத்மனாபனும் ஆமோதித்தனர்.

பிறகு ஒரு நல்லதினத்தில் கொட்டைகள் நடப்பட்டன. பல வருஷங்கள் பறந்தோடின. கொட்டைகள் மரங்களாகி கனிகள் குலுங்க பெரிய தோட்டமாகிவிட்டது. அத்தோட்டத்தில் ஆயிரக்கணக்காக சாத்துக்கொடி காய்த்தது. இம்மூவரும் தமக்கு வேண்டிய அளவு பழத்தை எடுத்துக் கொண்டு மீதியை விற்று அந்த பணத்தை செலவு செய்யாது பிதுரார்ஜிதசொத்து என்று சேர்த்து வைத்தனர். இந்த பிதுரார்ஜித சொத்தாகிய ஒரு சாத்துக்கொடியை அவமதிக்காமல் இருந்ததால் அவர்கள் பெரிய செல்வவந்தர்களாகிவிட்டனர். ஆனாலும் அவர்கள் தங்களுடைய தந்தையை ஒவ்வொரு நிமிடமும் நினைத்துக்கொண்டே இருந்தனர்.

பெரியவர்களை அவமதிக்காதே!



# ஆட்டுத்தலை அம்மா

வேலாயுதத்தின் முகத்தில் என்றுமில்லாத சந்தோஷம் இன்று தாண்டவமாடுவதைக் கண்ட அவனுடைய சகாக்களுக்குப் பெரிய ஆச்சரியமாயிருந்ததால் அதன் ரகஸியத்தை உடனே அறியவேண்டும் என்ற ஆவல் துடிதுடித்தது. சதா சர்வதா அழுமூஞ்சி அண்ணாவி என்று பெயர் வாங்கியுள்ள வேலாயுதம் இன்று புன்னகைப் பூங்காவனமாகிவிட்டான் என்றால் சாமான்யமா!

வேலாயுதத்தின் தோழர்களெல்லாம் ஒரே கூட்டமாகச் சென்று "வேலாயுதம்! வேலாயுதம்;" என்று கத்தினார்கள். வேலாயுதம் அடக்கமுடியாத உத்ஸாகத்துடன் கடகடவென்று பெரிதாகச் சிரித்துக்கொண்டே, "வாருங்கள்! வாருங்கள். தோழர்களே! வந்து களிப்புடன் பாருங்களே" என்று ராகமாக இழுத்துக் கவிபாடுவதுபோல் பாடி வரவேற்பதைக்கண்ட தோழர்களின் முகம் சுண்டியது. வேலாயுதத்திற்குப் பயித்தியந்தான் பிடித்துவிட்டது. அதனால்தான் பாவம் இப்படி ஆகிவிட்டான். என்று வருத்தத்தோடு அவனைப் பார்த்து பரிதாபப்பட்டு, "ஐயோ! வேலாயுதம்! எப்படியடா உனக்குப் பயித்தியம் பிடித்தது. உன்னைப் பார்க்கவே சகிக்கவில்லையே! என்னடா அநியாயம்! என்று ஒப்பாரி வைத்தார்கள்,

வேலாயுதம் மறுபடியும் சிரித்துக்கொண்டே, "ஜோஸியம் பலித்ததண்ணே! எனக்கு இப்போ! பேசிடும் திறமை உண்டு" என்று பாடியபோது வந்த தோழர்கள் உண்மையில் பயித்தியம் பிடிக்கும்போதே தடபுடலாகப் பிடித்துவிட்டது. இனி இங்கிருந்தால் கட்டாயம் அடித்தாலும் அடித்துவிடுவான். என்று எண்ணியவர்களாய், "உம்! வேலாயுதம் உனக்கும் எங்களுக்கும் இவ்வளவுதான் ப்ராப்தம்" போகிறோம்! என்று கூறிக்கொண்டே போய்விட்டார்கள்.

சிலமாதங்கள் உருண்டு ஓடின. ஒரு தினம் குப்பங்காடு என்ற ஊரில் பெரிய ஆடம்பரத்துடன் நோட்டீஸ் பறந்தது. அதில் "ஆட்டுத் தலையுள்ள மனுஷி, ஆறு காலுள்ள கன்றுக்குட்டி, மூன்று கண்ணுள்ள ஆடு முதலிய அதிசயப் பிறவியை வந்து பாருங்கள். டிக்கட்டு ஒரே அணாதான்." என்று அந்த விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்தது கண்ட வேலாயுதத்தின் தோழர்கள் அந்தக் கொட்டகைக்குச் சென்று பார்த்தார்கள்.

என்ன அதிசயம் அவர்களில் ஒருவனின் உள்ளம் வெடித்துவிடும்போலாகிவிட்டது. இரண்டு கொம்புள்ள தனது தாயாரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி ஆபரேஷன் [illegible] வேண்டிக்கொண்டு விட்டான். [illegible]



1—1—56
183198

கொண்டு கிழவி சொல்லாமல் ஓடிவிட்டாள். அவளை எங்கு தேடியும் காணாததால் அதோடு விட்டுவிட்டான். அதே தாயார் இப்போது ஓரணா டிக்கட்டில் காட்சியாகக் காட்டப்படுவதைக் கண்டதும் எத்தகைய கல்நெஞ்சமும் கரைந்துவிட்டது. அம்மா! என்று வாய்விட்டே கத்தியவாறு கிழவியிடம் பாய்ந்து ஓடி, அம்மா! இந்த கதிக்காம்மா வந்து விட்டாய். என்று அலறினான். இந்தக் குரலைக்கேட்டு உள்ளிருந்த ஹாட்டும் ஸூட்டும் பூட்டுமாக ஒருவன் சிரித்த முகத்துடன் வெளியேவந்து இதென்ன கூச்சல்! காட்சி நடக்கும் போது கலாட்டா! என்று கத்திக்கொண்டு வந்தவனைப் பார்த்த அந்த மனிதன் ஆச்சரியத்தினால் அலறிப்போய், "டேய்! வேலாயுதமாடா நீ....வேலாயுதம்....உனக்குப் பயித்தியமில்லை" என்று கூறினான்.

பெரியதாகச் சிரித்துக்கொண்டே! ஆமாண்டா! பயித்தியந்தான். பெத்த தாயை வைத்துப் படைக்க மனமின்றி ஆபத்தான ஆபரேஷன் செய்து சாகடிக்க ஊரைவிட்டு ஊர் ஆஸ்பத்திரியில் கொண்டுவிட்டுவிட்டு வந்த புண்யவானாகிய உனக்கு நான் பயித்தியந்தாண்டா! அதே கிழவி உன் தாயார் என்று எனக்குத் தெரியாமலேயே நான் அவளை வைத்து ரக்ஷிக்கும் முறையில் நானும் அவளும் சேர்ந்து சுகப்படுகிறோம் தெரியுமா? அன்று கிழவி எனக்குக் கிடைத்த சந்தோஷத்தில்தான் சிரித்தேன், பாடினேன் ஆனால் உங்களிடம் விஷயத்தைச் சொன்னால் கூட்டாளியாக்கிவிடுவீர்கள் என்று என் பெண்ஜாதி சொல்லியதால் பயித்தியமாகவே நடித்தேன். என்று தைரியமாகச் சொன்னான். கிழவியும் உங்கம்மா செத்துட்டாடா! இனிமே நான் வேலாயுதத்தின் அம்மா! போடா! போ...என்று வெறுப்புடன் கூறினாள்.

---

## அட்டைப்பட விளக்கம்

கவிகள் வர்ணிக்கக்கூடிய நிலையில், இடையில் குளிர்ந்த நன்னீரைத் தாங்கி வரும் சுந்தரியைக் கண்ட அவள் கணவன் தான் கவியாகப் பிறக்கவில்லையே என்று வருந்துகிறான்போலும். அன்பின ஜ்வாலையுடன் நோக்கி...சுந்தரி! பொங்கல் புதுநாளன்று உனக்கோர் நல்ல செய்தி கொண்டுவந்திருக்கிறேன். ஊழிக்கூத்தின் தாண்டவம்போல் நம் தென்னாட்டில் சில ப்ரதேசங்களை அதீத மழையால் அழித்துவிட்டக் கொடுமைக்கு இலக்காகிய மக்களுக்குப் பலரும் தம் சக்திக்குத் தக்கவாறு தனமாயும், உடையாயும், உணவாயும் இதர பலவிதங்களிலும் உதவி செய்யும்படி வேண்டுகோளை விடுத்திருப்பதை இப்பத்ரிகையில் கண்டேன். உடனே ஒரு வண்டி நெல்லை அனுப்பிவிட்டேன். நீயும் உன் சகாக்களிடமிருந்து பழைய உடைகளைச் சேகரித்து அனுப்ப இன்றே தொண்டு புரியத் தொடங்கிவிடு என்கிறான்...ஒவ்வொரு கிராமத்திலும் இந்த வெள்ள நிவாரணத்திற்கு உதவி புரிந்து நம் கடமையைச் செலுத்தக் கோருகிறோம்.

# மேனாட்டுத் தத்துவம்

## இரண்டாம் பாகம்

## ஸிம்போஸியம்; பேட்ரஸ்

ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

'சட்டங்கள்' என்ற நூலில் காணப்படும் பத்தாம் பகுதியும் நான்கு, ஐந்து—இவ்விரு பகுதிகளும் நம் சிந்தையைக் கவராமற் போகா. இப்பகுதிகள் மதத்தைப்பற்றியும், தெய்வத்தின் இயல்பைப்பற்றியும் ஆராய்ச்சி செய்கின்றன. தெய்வ நம்பிக்கையின்மையை முரசடிக்கிற முயற்சி இந்தக் காலத்தில் மட்டுமன்று; மனிதன் தோன்றின காலத் தொடக்கத்திலிருந்தே இத்தகைய இயல்பு இருந்து வருகின்றது என்று சாற்றலாம். தெய்வமின்மை என்றதற்குக் காரணங்கள் இக்காலத்து வாதிகளால் காட்டப்படுவதைக் காட்டிலும் அந்தக் காலத்திலேயே நன்றாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் தெய்வமின்மை வாதம் நாட்டேமத தேய வலிவு இழந்ததையும், இழந்து வருவதையும் நாம் கண்டு வருகின்றோம். சட்டத்தை நம்புகின்றவர்களும், தெய்வத்தை ஒப்புக்கொள்ளுகிறவர்களும், சட்டத்திற்குப் பகைமான காரியங்களையும், சமய நெறிக்கு விலக்கான தீச்செயல்களையும் புரிகிறதில்லை.

ஆனால் தீய அலுவல்கள் மூன்று காரணங்களால் எழலாம். தெய்வங்கள் இல்லையென்று சாதிப்பார்கள், சமய நெறியைப் புறக்கணிப்பார்கள். மற்றுஞ் சிலர் 'தெய்வங்கள் இல்லாமலில்லை; ஆனால் அவைகள் உலக மக்களைக் கவனிப்பதில்லை என்று இயம்புவார்கள். இவர்களும் தீச்செயல்களைச்செய்வார்கள். வேறு சிலர் வேள்விகள் மூலமாகவும், பிரார்த்தனைகள் மூலமாகவும் அவைகளின் சீற்றத்தைத் தணித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் ஆழ்ந்திருக்கின்றனர். அறம் அல்லாததை இயற்றினாலும் தெய்வங்களைச் சமாதானஞ் செய்யக்கூடும் என்ற நம்பிக்கையே கெட்ட காரியங்களுக்கு வழியைத் திறந்துவிடக் கூடுமன்றோ.

எல்லாம் இயற்கையின் தொழிலால் நடக்கின்றன; முக்காலங்களிலும் எல்லாவற்றிற்கும் காரணம் இயற்கைச் சக்திகளே; இயற்கைக்கு அப்பால் ஒரு சக்தியை நாட வேண்டியதில்லை என்று கூறுவாரும் உளர். எல்லாம் குருட்டுத்தனமாய் நிகழ்கின்றன. கலையினால் பிறக்கக்கூடிய பொருள்களும் இயற்கைச் சக்திகளிலிருந்து தோன்றியவையே. ஐந்து பூதங்களே எல்லாவற்றிற்கும் காரணம் என்று மொழிவார்கள்: "ஆத்மா" என்பது இயற்கைச் சக்தியால் பின்பு தோன்றிய ஒரு வடிவம் என்று சர்ச்சை செய்வோர்களுக்கும் பதில் பிளேட்டோ அளிக்கின்றார்.

இயற்கையை நோக்கினால் உண்மை விளங்கும். ஒன்று மற்றொன்றைத் தள்ளுகின்றது. இதை இன்னொரு சக்தி ஆட்டுகிறது. இப்படிச் சொல்லிக்கொண்டே போனால் முடிவு ஏற்படாது. ஆதலால் எல்லாவற்றையும் ஆட்டுகிற ஒரு சக்தி இருக்கிறது. அது மற்றொன்றால் ஆட்டப்படுகிறதில்லை. அது தான் 'ஆத்மா'. இந்த 'ஆத்மா' பிரகிருதிக்குப் பின்னால் தோன்றவில்லை. ஆத்மாவுக்குப் பிறகு, இந்தப் பிரபஞ்சம் விரிந்தது. இந்தப் பிரபஞ்சத்திற்குத் தலைவன் ஆத்மாதான். இந்த ஆத்ம சக்தியால்தான் எல்லாம் தம் தம் தொழில்களைப் புரிகின்றன. உடன்மிசை உயிரென இந்த ஆத்மா எங்கும் கரந்து நிறைகின்றது. விண், காற்று, கடல், கதிரவன், மதி மற்ற கோளங்கள்—இவைகளை ஊடுருவிக்கொண்டு ஒரு சக்தி ஓடுகின்றது. இந்தச் சக்தியால் தான் இயற்கைச் சக்திகள் ஒழுங்காய்ச் செல்லுகின்றன. காலை அலர்கின்றது; பகல் தோன்றுகின்றது; இரவு பின்தொடர்கின்றது. விண்மீன்கள் வான வீதியில் பல்லாயிரம் விளக்குகளென மிளிர்கின்றன. நாள், வாரம், மாதம், ஆண்டு—இவைகள் ஊர்வலம்போல் கம்பீரமாய் நகர்கின்றன. பருவ காலங்களின் இடையறு நடனத்தைப் பார்த்துப் பார்த்து உவகை கொள்ளுகின்றோம். ஏதோ ஒரு சக்தியின் ஆணையால் எல்லாம் ஓடுகின்றன என்ற நம்பிக்கை நமக்கும் பிறக்காமற் போகுமோ? தெய்வங்கள் இருப்பதாக ஒப்புக்கொண்டால், அவைகள் நம்மைக்கவனிக்கவில்லை என்று கூறுவது தவறாகும்.

உலகத்தில் கெட்டவர்களும், அறப்பாதையிலிருந்து விலகினவர்களும் வளமிக்க வாழ்க்கையை நடத்துகிறார்களே. இது நியாயமா? இது அறமா என்ற கேள்வியை ஒருவன் எழுப்பலாம். ஆனால் உண்மையிலே அவர்கள் இன்புற முடியுமோ? இன்பத்தை அவர்கள் நுகர்வதாக நீ கருதுகின்றாய். அது உன் பிழை. உன் அறியாமைதான் இதற்குக் காரணம். தெய்வங்கள் எல்லாவற்றையும் அறியக் கூடியவைகள். எல்லாவற்றையும் அமைக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தவைகள் நன்மையைத் தரக் கூடியவைகள். இப்படியிருக்கிற தெய்வங்கள் நம்மைக் கவனிக்காமல் இருக்குமா? தெய்வங்களுக்கு, இது சிறியது, இது பெரியது என்று கருதுகின்ற ஓர் இயல்பு இல்லை. எல்லாவற்றையும் அவைகள் நடுவு நிலையிலிருந்து நோக்குகின்றன.

உதாரணமாக ஒரு மருத்துவன் உடலின் தன்மை முழுவதையும் ஆராய்ந்தே மருந்தை அளிக்கின்றான். உடம்பில் பெரிய கோளாறுகள், சிறிய கோளாறுகள் என்று அவன் பிரிக்கிறதில்லை. ஏதாவது ஒரு கோளாறு நிகழ்ந்தாலும் உடம்பின் நிலைமையையும், அமைதியையும் அது குலைத்துவிடும் என்று அவன் கருதுவான். மேலும் ஒரு கட்டிட வேலை செய்கிற கொல்லன் பெருங்கற்களையும் பயன்படுத்துகிறான்; சிறிய கற்களையும் பயன்படுத்துகிறான். சிறிய கற்களைப் புறக்கணிக்கிறதில்லை. கட்டிடத்திற்கு எல்லாம் தேவையே. சிறியது, பெரியது என்று ஒரு கொல்லன் தள்ளுவானேயானால், கட்டிடம் எழும்பாது. இந்தப் பிரபஞ்சமாம் மாபெரும் காப்பியத்தைப் படைத்த கடவுளுக்கு எல்லாப் பாத்திரங்களும் தேவையில்லை. ஏதாவது ஒரு பாத்திரம்

சரியாய் நடிக்கவில்லையென்றால் காப்பியம் சிறந்த காப்பியமாகக் காட்சி அளிக்காது. எதை விலக்க முடியும்; எல்லாம் அவன் படைத்த பொருளன்றோ. அதில் சிறியதுமில்லை; பெரியதுமில்லை என்றதை நாம் உணர வேண்டும். 'பிப்பாபாஸஸ் (Pippapasses)' என்ற சிறந்த நாடகத்தில் 'பிரவுனிங் (Browning)' எல்லாச் சேவையும அவனுக்கு ஒன்றே. அதில் சிறியதுமில்லை பெரியதுமில்லை என்று கூறுகின்றார்.

பல்லாயிரம் நரம்புகள்கொண்ட வாழ்க்கையாழில் எந்த நரம்பை அறுத்து எறிய முடியும—ஒரு தெய்வ கானம கேட்கின்றது எங்கும். இந்த அகிலமாம் புல்லாங்குழல்கொண்டு காலக் கூடத்தில் தன் கானத்தை இசைத்து வருகின்றான் ஆயர்குல நந்தன். எல்லா ஜீவராசிகளும அவன கானம செய்யும தந்திகளே. எந்தத் தந்தி விலக்கு அவன மீட்டும பிரபஞ்சயாழில். ஒரு தந்தி அறுந்தாலும்; உலகத்தில் அமைதி போய்விடும்; ஆதலால் தெய்வம் எல்லாவற்றையும் கவனிக்கின்றது. பிரபஞ்ச நாடகத்தை முழுதும் அறியாதவர்கள தெய்வத்தின்மீது இருண்ட அஞ்ஞானத்தால் குறை கூறுவார்கள். ஆண்டவன் கருணையால் புன்முறுவல் பூத்து நம அறியாமையை நோக்குவான். தெய்வங்கள் அறநெறியில்தான செல்லுகின்றன என்று ஹோமர் சாற்றுகின்றார். தீய பாதையில் செல்லுகிறவர்கள் இன்னும் அதீதமான பாதையில்தான் செல்லுவார்கள; அறத்திலே நிற்கின்றவர்கள் நற்கதி அடைவார்கள். தெய்வங்கள வகுத்த அறப்பாதையை விட்டு ஒருவன் விலகினால் அவனுக்குத் தண்டனை கிடைக்காமற் போகாது. தெய்வம் அமைத்த சட்டத்தை மீறி ஒருவரும் போக முடியாது.

இத்தகைய இயல்பு வாய்ந்த தெய்வங்களைக் குற்றம் புரிந்தோர்கள் சமாதானம் செய்ய முடியுமா? என்ற கேள்வியைப் பிளேட்டோ எழுப்புகின்றார். தெய்வங்கள் குற்றம் புரிந்தோர்கள் செய்யும் வேள்வியாலும, பிரார்த்தனையாலும் ஏமாந்து போகா? அவைகளுக்கு லஞ்சம் கொடுத்து நம் காரியத்தைச் சாதிக்க முடியாது.

நான் கண்ட முடிவு இதுதான் என்று அந்த அத்தீனியன் முடிக்கின்றான். (1) தெய்வங்கள் இருக்கின்றன; (2) அவைகள் நம்மைக் கவனிக்கின்றன. (3) அவைகளை லஞ்சம கொடுத்து ஏமாற்ற முடியாது.

நான்கு, ஐந்து இவ்விரு பகுதிகளும் பத்தாம் பகுதி இசைத்த சுருதியில்தான பேசுகின்றன.

கடவுள்தான் ஆதி, நடுவு, முடிவு-இவை மூன்றுக்கும் காரணமாய் இருக்கிறார். அவர் அறமே வடிவாய் நிற்கின்றார் என்பதை நாம் மறக்க முடியாது. அறப்பாதையைவிட்டு விலகுவோர்களுக்கு அறம் கூற்றமாகும். அகம்பாவம், செல்வச் செருக்கு—இவைகளைப் படைத்தவர்களுக்கு ஆண்டவன அருள் கிட்டாது.

பெற்றோர்கள் இறந்தால் அவர்களுக்குச் செய்யவேண்டிய கடனைச் செலுத்த வேண்டும். மிகுந்த ஆரவாரமில்லாமல் சாத்திரங்கள் விதித்தபடி—முன்னோர்கள் புரிந்த முறைப்படி—அவர்களையும் புதைக்க வேண்டும். வருஷச் சிரார்த்தத்தைத் தவறாமல் அவன் செய்யக் கடமைப்பட்டவன். தன் சக்திக்கேற்றவாறு செய்தல் வேண்டும். அவர்களை மறத்தல் கூடாது. அவர்களைப் போற்றுதல் வேண்டும். அவர்களைப் போற்றினால்தான் ஆண்டவனுடைய அருள் பிறக்கும் என்கிறார். நம் நாட்டின் சடங்குகளோடு எத்தனை தொடர்புடையதாய் பிளேட்டோ வகுத்த சடங்குகள் இருக்கின்றன பாருங்கள்.

தெய்வங்களைப் பேணுவதுபோலவே நம் ஆத்மாவை நாம் காப்பாற்ற வேண்டும். நம் வேத காலத்துச் சான்றோர்கள் ஆத்மாவை உள்ளபடி அறிய வேண்டும் என்றார்கள். ஆத்மாவை அறியாதவர்கள் ஆத்மவைக் கொன்றவர்களாவார்கள். தீதை விலக்கி நல்லதை அடைந்து அதில் ஊன்றி நிற்றல்தான் ஆத்மாவைக் காப்பாற்றினது ஆகும்.

நம்முடைய உடலையும் ஆதரித்தல் வேண்டும். அது மிக அழகாயிருக்க வேண்டாம்; அது மிக வலிவுள்ளதாய் அமைய வேண்டாம். மிதமான நிலையில் இருந்தால் போதும். கீதையிலும் சரீரத்தை நடுவு நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதிகமான உண்டியும் உதவாது; காமத்தை வாட்டவும் கூடாது. மிதத்தை மீறி நடந்தால் அது நமக்குக் கெடுதலை விளைவிக்கும். மிகுதியான செல்வமும் வெறுக்கத் தகுந்தது. நம்முடைய குழந்தைகளுக்கு நாம் அளிக்கக்கூடிய செல்வம் அடக்கந்தான். பெரியவர்கள் சிறியோர்களுக்குத் தக்க மரியாதை காட்டுதல் சாலச் சிறந்ததாகும். வெறும் உபதேசம் செய்தால் போதாது. சான்றோர்களின் நடத்தையே ஒரு பெரும் உபதேசமாகும்.

நியாயமற்ற காரியத்தைப் புரியாதவன் போற்றுதற்குரியவன். அறப்பாதையைவிட்டு ஓடுபவர்களை அதிகாரவர்க்கத்தாருக்குக் காண்பித்துக் கொடுத்து அவர்களை நல்ல பாதையில் திருப்ப வேண்டும். தான் மட்டும் அறநெறியில் நின்றால் போதாது. அரசாங்கத்திற்குத் தெரிவிப்பவன் உத்தம மனிதனாவான். அரசாங்கத்திற்கு அறிவிக்கவிருப்பமிருக்கிறது. ஆனால் அதைத்தெரிவிக்க அவனால் முடியவில்லை. அவன் இரண்டாந்தரப்பட்ட மனிதனாவான். தன்னுடைய நன்மையைத் தானே நுகர வேண்டும் மற்றவர்களோடு சேர்ந்து துய்த்தல் கூடாது என்று பொறாமை உணர்ச்சி உடையவன் மூன்றாம் இனத்தைச் சார்ந்தவன். அழுக்காறில்லாமல் நாட்டின் நன்மைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் முயல வேண்டும். அழுக்காறு அற்றவர்களே சான்றோர்கள் என்று நம் பாகவதமும் கூறுகின்றதன்றோ?

சான்றோர்கள்போல நடக்க முடியவில்லையே என்ற பெருமை வாய்ந்த அழுக்காறு இருத்தல் நலமாகும். பிறருடைய புகழையோ

அல்லது ஆற்றலையோ குறை கூறும் அழுக்காறு நிந்திக்கத் தகுந்தது.

அமைதியாகக் காலம் கடப்பதுதான் உத்தமர்தம் இலக்கண மாகும். ஆனால் சான்றோருக்குச் சினமும் வேண்டும். சிறுமையைக் கண்டு சீறி விழுகிற சீற்றம் போற்றத் தகுந்தது என்று பிளேட்டோ கூறுகின்றார். ஏசுநாதர் கோயிலை மாசுறச் செய்தவர்களைக் கடிந்து பேசின சம்பவத்தை நாம மறக்க மாட்டோம். இக்காரணம்பற்றியே ரசலும ஏசுநாதர்மீது குறை கூறியிருக்கிறார். ஆனால் அச்சீற்றம் கருணையால்தான பிறந்தது என்பதை நாம் மறக்கக்கூடாது. இராகவனுடைய குணங்களைச் சித்திரிக்கிறபொழுது, பொறுமைக்குப் புவியும, சீற்றத்திற்கு ஊழித்தீயுமாய் அவன் நிற்கின்றான என்று வால்மீகி மொழிகின்றார்.

பிழை செய்பவர்கள் யாவரும் அறியாமையால்தான் புரிகிறார்கள், உண்மையை உள்ளவாறு அறிந்த உத்தமன் குற்றஞ் செய்யான் என்பதுதான் சாக்ரடீஸின் கருத்தாகும். இக்கருத்தின் அடிச்சுவட்டைத்தான் பிளேட்டோவும்பற்றுகின்றார் கடவுளுக்குச் செய்யவேண்டிய கடன் நம் பெற்றோர்களுக்கு நாம் செய்கிற கடன். வந்த விருந்தைப் போற்றுகிற கடன — இவைகளைப்பற்றிச் சட்டங்கள் என்ற நூல் நமக்கு நன்கு நவில்கின்றது.

பிளேட்டோவின் குடியரசைப்போல அத்தனை லட்சியம் வாய்ந்திராமற்போனாலும், அதில் கோயில்கொண்டிருக்கிற கனவுச் சித்திரத்தை ஒரு நனவுச் சித்திரமாக ஆக்க பிளேட்டோ முயன்றிருக்கிறார் என்று இந்நூலின் பன்னிரண்டாம் பிரிவு நமக்கு உணர்த்துகிறது.

“இதுகாறும் ஒரு கனவாய், ஒரு கருத்தாய் நின்றது ஓர் உருவை அடையட்டும்” என்று பிளேட்டோ தாம் படைத்த பாத்திர வாயிலாக உலகத்திற்கு அறிவிப்பதை நாம் மறக்க முடியுமோ!

---



உபாத்தியாயினி :—ஏய் ராஜி! தானத்தில் சிறந்த தானமென்ன?

ராஜி:—கோதானம், அன்னதானம்

உபா:—ஏமாந்துவிட்டாயே! ‘நிதானம் பிரதான’ம்

# விகட வெடி

**'புஜலா'**




பாலு:—டேய் சந்தர்! பதத்தில் சிறந்த பதம் எதுடா?

சந்தர்:—பூ இது தெரியாதா, பரமபதம்

ராமு:—உனக்கு இதுகூட தெரியல்லையே 'சபதம்'டா

❁

சுப்பு:—டேய் குப்பு! நான ஒன்று கேட்பேன், நீ பதில் சொல்கிறாயா?

குப்பு:—கேளேன், என்னத்தைக் கேட்கப் போகிறாய்?

சுப்பு:—பதியில் சிறந்த பதி எது?

குப்பு:—பசுபதி, சபாபதி இதுபோலத்தானே

சுப்பு:—அதுதான் இல்லே 'சதிபதி'தான்

❁

சுராஜ்:—கண்ணு காளியில் சிறந்த காளி எதுடா?

கண்ணன்:—காளியில் சிறந்தகாளி பத்ரகாளி, வீரக்காளி

சுராஜ்:—ஐய்யய்ய! பங்காளிடா.

❁

கோபு:—இருடா! நான் ஒன்று கேக்கறேன், தேனில் சிறந்தது எது.

கண்ணன்:—கொம்புத் தேன்.

கோபு:—தப்பு, தேனில் சிறந்தது 'வந்தேன்'

❁

சீதா:—கமலா! காலில் சிறந்த கால் எது?

கமலா:—வெல்வட் செருப்பு போட்டுண்ட கால்

சீதா:—ஹி... ஹி... ஹி... உனக்கு செருப்பு நினைவுதான், என்ன தெரியுமா? வாய்க்கால்.

❁

பத்மா:—லீலா! பொடியில் சிறந்தது எது?

லீலா:—மூக்குப்பொடி, மிளகாய்ப்பொடி, ரஸப்பொடி,

பத்மா:—ஹி... ஹி... அதெல்லாமில்லே தொண்டர் அடிப் பொடி.

# குடும்ப வைத்யம்

வாம்மா சுமதி! என்ன கொஞ்சநாளாய் உன்னைக்காணவே இல்லையே! எங்கேயாவது ஊருக்குப் போயிருந்தாயா? என் நாட்டுப் பெண் கமலாவை விட்டு உன்னைப் பார்த்துவரச் சொல்லவேண்டும் என்றிருந்தேன்; நீயே வந்து விட்டாய் என்ன, உடம்பு ஒன்றுமில்லாமல் இருக்கிறாயா?

சுமதி:—பாட்டி உடம்பு நன்ரு இருந்தால் விசாரமென்ன ஒருவாரமாயிற்று ஓரே வயிற்றுவலி வயிற்றில் குத்தல் வயிற்றை இழுத்துப் பிடிக்கின்றது தாங்கமுடியவில்லை. பல்லைக் கடித்துககொண்டு ஒரு வாரமாய் வீட்டு வேலைகளை செய்வதும் மீதி போதுக்கு படுக்கையுமாய் காலத்தை தள்ளுகிறேன். டாக்டரிடம் காட்டினேன் ஏதோ 2 பாட்டல் மிக்சர் கொடுத்தார் சாப்பிட்டேன் குணமில்லை மிஞ்சிபோனால் அது, இதுவென்று பேர்வைத்து படுக்கவைத்துவிடப்போகிறார்களே என்று பயமாயிருக்கிறது. என்னசெய்வது பாட்டி?

பாட்டி:—இதுக்கல்லாம் டாக்டரிடம் போவதென்றால் முடியுமா ஸம்ஸாரிகளுக்கு ஏதோ நம் கையிலான மருந்தை பார்த்துவிட்டு முடியாவிட்டால் பிறகு டாக்டர் இருக்கிறார்.

சுமதி:-எனக்கு ஒரு கைவைத்தியமும் தெரியாதே பாட்டி உங்களுக்கு ஏதாவதுதெரிந்தால் சொல்லுங்கள் செய்துபார்க்கிறேன். என் கணவரும் எடுத்ததற்கெல்லாம் டாக்டரா? ஏதாவது பாட்டிவைத்தியம் பார்க்கக்கூடாதோ என்று கேட்கின்றார். என்ன செய்வதென்று தெரியவில்லை பாட்டி. எனக்கு ஒன்றும் தெரியாதே என்று சொன்னேன். நீங்கள் ஒரு மருந்து சொல்லுங்கள் நான் தாராளமாக செய்கிறேன்

பாட்டி:—ஸரி, வடிமிளகு கஷாயம் செய்யும் முறையைச் சொல்கிறேன் கவனமாய்கேள். உன் கையால் பிடிமிளகை எடுத்துக்கொள். அதை இன்று சாயந்திரம் ஒரு சின்னபாத்திரத்தில் போட்டு ஆழாக்கு ஜலம் விட்டு மூடிவை. மறுநாள் அதை அடுப்பில் வைத்துக் காய்ச்சி அரை ஆழாக்கு ஜலமாக சுண்டகாய்ச்சி கஷாயத்தை வடிகட்டி குடித்துவிடு. பிறகு அதே மிளகை மறுபடி சின்ன தட்டில் உலரவைத்து மறுபடியும் கஷாயம்போட்டு குடித்துவிடு மிளகை அதேபாத்திரத்துடன் வைத்திருந்து மறுதினம் காலை அதே கஷாயத்தை போட்டுவிடு. சாயந்திரமும் சாப்பிடு. இது மாதிரி மூன்று நாட்களுக்கு செய்தாயானால் தினத்திற்கு தினம்காரம் குறைந்துவிடும். அதனால் பாதகமில்லை. பிறகு அந்த மிளகை ரஸம் செய்துவிடலாம் அதையும் வீணடிக்கவேண்டாம். தடைசொல்லாமல் செய்து பார் குணம் உண்டு. இது என் அனுபவத்தில் கண்டறிந்த உண்மை. அப்படி இல்லையென்றால் இருக்கவே இருக்கிறார் டாக்டர். எடுத்ததெற்கெல்லாம் எனக்கு டாக்டரிடம் போகமுடிவதில்லை. எங்கள் வீட்டு வரையில் கைமருந்து உபயோகிக்கின்றேன். நீயும் செய்து பார் பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

—V. அஹோபிலா.

1—1—'56.

# "ப்ரதிபிம்பம்"

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்.

[தொடர் கதை]

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற பாரதியின் வாக்கு எவ்வளவு பொருத்தமாய் இருக்கிறது. வீட்டில் எல்லோரும் ஏகோபித்துச் செய்யாததின் வினைதானே இந்த அமர்க்களம். ஆரம்பத்திலிருந்து முட்டுக்கட்டை போட்டவன கடைசியில் திண்டாடும்படிப் பரதேசிகளை அனுப்பி அவதியுறச் செய்துவிட்டானே. இதற்கு என்ன செய்வது என்று மங்களம் உள்ளும் வெளியுமாய் அலைந்தாள். ருத்ரமூர்த்தியைப்போல் இருக்கும் முத்துசாமியின் முகத்தைப் பார்க்கவும் பயந்தாள். அதே சமயம் வீதியில் கண்ட காட்சி மங்களத்தின் மனதை உருக்கிவிட்டது. பசியால் துடிக்கும் குழந்தைகளை அதன் தாய் தயாதாக்ஷண்யம் இன்றி நாயை அடித்துப் போடுவதைப்போல் புடைப்பதையும், அவை பசியின் கொடுமையும், தாயின உதையும் தாங்கமாட்டாது நிலத்தில் விழுந்து புழுவாய்த் துடிப்பதையும் பார்த்து மங்களத்தின் கண்கள் தாரையாக் கண்ணீரைச் சிந்தியது.

சீ! நாமும் ஒரு மனிதவர்க்கமா? பெருமையும் பெயரும் அடைய ஆயிரம் பேருக்கு மேலான புளியேப்பக்காரர்களுக்கு அன்னம் இட்ட கை, உண்மைப் பசியோடு தவித்துத் துடிக்கும் ஏழைகளுக்கு அன்னம் இடத் தயங்குகிறதே. ஏழைகளின் உண்மையான பசிப்பிணியை அறிந்துதான் நம்போன்றவர்களின் அகக்கண்ணைத் திறக்க பாரதியார் "தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாடினார்? ரத்னத்திற்கு இருக்கும் காருண்ய சிந்தைகூட இல்லாது கட்டை மரமாய் இருக்கிறேனே என்று மனம் நொந்தாள்.

320 ரூபாய் கொடுத்து இந்தப் புடவை வாங்கி ஒருநாள் உடுத்தி அவிழ்த்துப் பிறகு பெட்டியில் வைத்துத் தூங்க வைப்பதில் என்ன பலன். இது வீண் ஜம்பம்தானே. இந்தப் பணத்தில் ஏழைகளுக்கு வயிறாறக் கஞ்சி வார்த்தால் தலைமுறைக்கும் அந்த தர்மம் நம்மைக் காக்கும் என்று ரத்னம் சொன்ன சொற்கள் காதுகளில் ரீங்காரம் செய்து வேதனையைப் பின்னும் தூண்டியது. எவ்வளவு உண்மை. நான் பகட்டுக்குத்தானே ஆசைப்பட்டேன். பகட்டாய்ப் புடவை வாங்குவதில் எவ்வளவு சாதக பாதகங்கள் இருக்கிறது. எத்தனைவிதமான விழிகள் மாதவியை நோக்குகிறது. சிலர் சந்தோஷப்படுகிறார்கள். சிலர் இவளுக்கு இத்தனை அதிர்ஷ்டமா என்று பொருமைப்படுகிறார்கள். சிலர் நமக்கு இப்படி அதிர்ஷ்டம் இல்லையே என்று சபிக்கிறார்கள். இதற்கெல்லாம் தானே நான் மாதவியை இரையாக்கிவிட்டேன். இதனால் எந்த கஷ்டம் வந்தாலும் சரி, இன்று பரதேசிகளின் வயிற்றைக் குளிர வைத்துத்தான் நான் சாப்பிடப் போகிறேன் என்று சபதம் செய்தவாறு மடமட என்று சமையல் உள்ளே விரைந்தாள்.

அதே சமயம் மங்களம் எதிர்பாராதவிதம் முத்துசாமி, மங்களம்! நான் ஒரு தீர்மானம் செய்துவிட்டேன். பரதேசிகளின் பரிதாபத்தைப் பார்த்தால் விரட்டவும் மனது வராதுபோல் இருக்கிறது. அதிலும் குழந்தைகளின் எலும்புக்கூடான உருவங்கள் கண்ணை விட்டே அகல மறுக்கிறது. நாம் ஒரு குழந்தைக்கு ஏங்கித்தானே இவ்வளவு சிறப்பாய் இந்தக் கல்யாணத்தைச் செய்கிறோம். ஊரார்தான் என்ன சொல்லமாட்டார்கள். இவ்வளவு சிறப்பாய் செய்த கல்யாணத்தில் ஏழைகளை விரட்டினார்கள் என்று ஏச மாட்டார்களா? இந்தச் சமயம் அவர்களின் சாபத்திற்கும், ஏச்சுப் பேச்சுக்கும் ஆளாகக்கூடாது. அதனால் என்ன செலவானாலும் இன்று அவர்களைத் திருப்திசெய்துவிடுவது என்று தீர்மானித்து விட்டேன். இந்த மத்யானத்தில் சாமான் வரவழைப்பதுதான் எப்படி என்று புரியவில்லை.

என்ன அதிசயம்! இருவர் மனதிலும் ஏககாலத்தில் ஒரே எண்ணம் தோன்றியது ரொம்ப ஆச்சர்யமாய் இருக்கிறது. நீங்கள் என்ன திட்டினாலும்சரி, இன்று இவர்களுக்குச்சாதம்போட்ட பிறகுதான் நான் சாப்பிடுவது என்றுதான் வந்துகொண்டு இருக்கிறேன். மனமிருந்தால் வழிதானா இல்லை. நம் வருஷாந்திர சாமான்களை எடுத்துச் செலவழித்துக்கொண்டால் போகிறது... வாருங்கள் முதல் பசிக்குப் பக்ஷணங்களைக் கொடுத்துவிட்டுப் பிறகு சமைத்துப் போடச் சொல்லலாம் என்று ஓடினாள்.

முதலில் சமையல்காரர்களைக் கூப்பிட்டு பக்ஷணங்களை ஏழைகளுக்குப் பங்கு இடச்செய்தாள். அதிகப்படியாய் இன்னும் நாலு ஆட்களை அழைத்து வரச் செய்து ஒரு நொடியில் சமைக்க ஏற்பாடு செய்தாள்.

மங்களம் பரதேசிகள் அனைவருக்கும் இலைபோட்டு வயிறு நிறையும் வரை தன் கையாலேயே பரிமாறினாள்; நிதியைக் கண்டதைப்போல் பரக்கப் பரக்க அள்ளித் தின்னும் காட்சி எல்லோர் உள்ளத்தையும் உருக்கியது.

உண்ட மீதி துண்டத்தில் என்பதைப்போல் வயிறு புடைக்கும் வரை மீதியை டப்பாக்களிலும் திணித்துக்கொண்டு கிளம்பினார்கள். ஒவ்வொரு பரதேசியின் உள்ளமும் ரத்னசாமியின் குடும்பத்தை வாழ்த்தியவாறு சென்றது. பரதேசிகள் உண்டு சென்ற பிறகுதான் மங்களமும், முத்துசாமியும் போஜனம் செய்தார்கள். மங்களத்திற்கு செய்ய முடியாத ஒரு காரியத்தைச் சாதித்ததைப்போல் ஒரு சந்தோஷம் மனதில் குடிகொண்டது மத்தியில் தன் பிள்ளையும் இன்றுகூட இருந்து களிக்கவில்லையே என்ற குறையும் இருக்கத்தான் செய்தது.

❋

இதற்குள் மாலை நாலுமணி ஆய்விட்டதால் மாதவிக்கு அலங்காரங்கள் செய்து கச்சேரிக்கு வேண்டிய ஏற்பாட்டில் ஈடுபட்டாள்.

வரவேற்புக்கென்றே ப்ரம்மாண்டமான பந்தல் போடப்பட்டு இருந்தது. அது சுற்றும் செடி கொடி சுவர்கள் உள்பட தோரண விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டு ப்ரகாசித்தது. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் நடுமத்தியில் தாமரை

இதழ்கள் விரிந்து இருப்பதைப்போல் மகரம் கட்டி லக்ஷ்மியே வீற்று இருப்பதைப்போல் அதில் மாதவியை அலங்காரம் செய்து உட்காரவைத்து இருந்தது அந்தப் பந்தலுக்கே தனிசோபையைக் கொடுத்தது. எல்லோர் கவனமும் மாதவியின பக்கமே பாய்ந் தது. எதிர்ப்புறத்தில் கச்சேரி தடபுடலாய் நடந்துக்கொண்டு இருந்தது.

எது எவ்வளவு சிறப்பாய் நடந்தாலும் ஏனோ மாதவியின் உள்ளம் அமைதியின்றி அலைந்தது. தன் கணவனுக்கு விருப்பம் இல்லாத காரியத்தைக் கடமைக்காகத் தான செய்து கொளவது அவள் உள்ளத்தை வாள்கொண்டு அறுத்தது. எபபடியும் அவர் இன்று நடந்த விமரிசையைப் பற்றிக் கேள்விப்படாது இருக்கப் போவதில்லை. அதை வைத்துக்கொண்டு இன்னும் எனன குத்திக் காட்டுவாரோ? அது மட்டும் பரதேசிகளை விட்டாது அவர்களையும் த்ருப்தி செய்தோமே என்ற ஒரு த்ருப்தி சற்று சாந்தியைக் கொடுத்தது. அன்று தாம்பூலத்திற்கு வந்த அவ்வளவு பேர்களையும் மங்களமே வீதியில் நின்று சந்தனம், குங்குமம், புஷ்பத்துடன் வரவேற்று தக்க ஆசனங்களில் உட்கார வைத்து பிரத்யேகமாய் உபசரித்தாள். வந்த அவ்வளவு பேர்களுக்கும் அழகான தட்டில் தாம்பூலம, தேங்காய், பழம, சீபபு, குங்குமச் சிமிழ், மை முதலியவைகள் வைத்து தட்டு தட்டாய் எடுத்துக் கொடுத்து தன் ஆசையைப் பூர்த்தி செய்துக் கொண்டாள். இரவு போஜனத்திற்குப் பிறகு செனற பந்துக்கள், சிநேகிதர்கள் எல்லோருக்கும் அவரவர்களுக்குத் தக்கபடி ரவிக்கை, புடவையாக வைத்துக் கொடுத்தாள். மாதவிக்கு வந்த பரிசுகள் ஒருபுறம் மலைபோல் குவிந்தது.

❀

ரத்னசாமியின் கார் வீதியில் வந்து நிற்பதைப் பார்த்த முத்துசாமி சந்தோஷத்தோடு மகன் வந்து விட்டான் எனறு மனைவிக்குத் தெரிவிக்க உள்ளே ஓடினார். அத்தனை நேரம் அங்கே இருந்த மங்களம் வீட்டுக்குக் கிளமபும விருந்தினரை உபசரித்து, தாம்பூலம் கொடுக்க உள்ளே செனறிருந்தாள.

ரத்னசாமி காரில் இருந்தவாறே மின்சார விளக்குகளால் செய்து இருக்கும் அலஙகாரங்களை ஒரு பார்வை பார்த்தான். அடாடா எனன அமர்க்களம், என்ன பகட்டு என்று எணணிய வாறு இறங்கி உள்ளே வந்தான். வீதியில் இருந்த உறவினர் சிலர் ரத்னசாமியை வரவேற்று, என்னப்பா இவ்வளவு சிறப்பாய் நடக்கும் கல்யாணத்திற்கு நீ இல்லாது போனது ரொமப குறையாய் இருந்தது. இப்போதுதான் கொஞ்சம் குறை தீர்ந்தது எனறார்கள். ரத்னம் குதூகலாய், இவ்வளவு பேர் இருக்கும்போது நான இல்லாவிட்டால் என்ன? என்று சொல்லிய வாறு உள்ளே ப்ரவேசித்தான, ட்யூப் விளக்குகளின் ப்ரகாசம் கண்ணைப் பறித்தது. அதறகும் மேல் மகரமும மத்தியில், ரதியைப் போல் உட்கார்ந்து இருக்கும மாதவியையும பார்த்து விட்டான.

ரத்னசாமியே ப்ரமித்து நின்ருன். அவ்வளவு நாள் இல்லாத ஒரு தனி அழகு இன்று மாதவியிடம் குடிகொண்டு இருப்பதைப் பார்த்து தன் கண் திருஷ்டியே எங்கு பட்டுவிடுமோ என்று மனம் துணுக்குற்றது. தன்னையும் மறந்து அவன் விழிகள் மாதவியிடம் லயித்தது. அதே சமயம் பழைய நினைவு ஒன்று தோன்றி திகைக்கவைத்தது. அங்கு நிற்கப் பிடிக்காது விருவிருப்பாய் உள்ளே சென்ருன்.

இதற்குள் சில உறவினர்கள் ரத்னசாமியின் கைகளைப் பிடித்து இழுத்துவந்து, "அருகில் வந்து நன்ருய்ப் பாரப்பா உன் மனைவியை! எப்படி தான் ரதியைப்போல் இருக்கிருள்! என்று ரதனத்தைக் குஷிபபடுததினர்கள. இதற்கெல்லாமா ரத்னசாமி அசைந்து கொடுபபவன். நீஙகள் எல்லோரும பார்த்து மகிழ் கிறீகளே! அதுவே எனக்குப போதும. மாதவி லக்ஷ்மிரூபாய் கனம இருப்பாள என்று தூரவிருந்து பார்த்தாலே தெரிகிறது! என்று கையை உதறிக்கொண்டு உளளே சென்றுவிட்டான்.

மகன் வந்துவிட்ட சந்தோஷத்தில் தலைதெறிக்க ஓடி வந்தாள் மங்களம். அபபா ராஜா அது மட்டும இபபோதாவது வந்தாயே நீ இல்லாதது குறையாகவே இருந்தது. இப்போதுதான த்ருப்தி ஆயிற்று. மாதவியைப் பார்த்தாயா? வா வா...என்று அன்பு ஒழுகக் கேட்டாள்.

ஆகா! பார்த்தாயிற்று. உங்கள் பணச் செருக்கும், டாம்பீக மும் எவ்வளவு பண மதிபபு இருக்கிறது என்று தெரிந்துவிட்டது. இந்த வீண ஜம்பச் செலவு செயத பணத்தை ஏழைகளுக்கு வாரி வழங்கினுல், எவ்வளவு உதவியாய் இருக்கும எனபது உங்களைப் போல சுக ஜீவிகளின மூளைக்கே எட்டாது. உங்கள் படாடோபத் தின பெருமையை நீஙகளே கண்டு களியுங்கள்! எனக்கு அவசிய மில்லை!...என்று சீறிவிழுந்தான.

உன் இஷ்டம் போல்தான் ஏழைகளுக்கும் த்ருப்தியாய்ப் போட்டு அனுபபி ஆயிற்றே. திடீர் என்று இபபடி ஒரு பரதேசிக் கூட்டத்தை அனுபபி எங்களைத் திணற அடித்துவிட்டாயே. என்ன செயவார்கள என்று நினைத்தாய். எப்படியோ திண்டாடி தவித்து சமாளித்தோம. முனபே அன்று ஏழைகளுக்கும் போடத்தான் வேண்டும் என்று சொல்லி இருந்தால் செய்ய மாட்டோமாடா? என்று முத்துசாமி சொல்லும்போது ரத்னத்தின் கோபம் உச்சத்தை எட்டியது. உதடுகள் துடிக்க, ஊம.. இந்த அர்த்தமற்ற கல்யாணமே வேண்டாம் என்று நான் சொன்ன வார்த்தைக்கு என்ன மதிப்பு கொடுத்தீர்களோ அந்த மதிப்பு தான் இதற்கும் கிடைத்து இருக்கும். மகா பக்தனை கபீர தாசை அவமதிக்கும் பொருட்டு சில துஷ்டர்கள் பெரும கூட்ட மாக பரதேசிகளைத் திரட்டி கபீர்தாஸ் இன்று அன்ன தானம் செய்கிருர் போங்கள் என்று அனுபபி வேடிக்கை பார்த்தார் களாம். மகா பக்தனை கபீரைக் கடவுளே வந்து ரக்ஷித்து அவன் மதிபபைப் பன்மடங்காகப் பெருக்கினுர் என்று கதை சொல் வார்கள். ஏழையான கபீர் பகவானின துணைகொண்டு காரியத் தில் வெற்றி பெற்ருன். உங்கள கையில் பணம் தணணீர் படும்

பட்டாக இருக்கும்போது இது என்ன கஷ்டம் என்றுதான் அனுப்பினேன். அதிலும் பேருக்கும், புகழுக்கும் ஆசைபபடும் நீங்கள் அட்டா......மங்களம்மாள் ஏழைகளுக்கு எனனதான் அன்னம் தானம்செய்தாள் என்று புகழுக்காகவாவது கட்டாமம் செய்வீர்கள் என்றுதான் நானே அவர்களுக்கு பத்திரிகை அனுபபினேன். அதுமட்டும் தூரத்தாது குழம்பு சாதமாவது போட்டீர்களே. அதுவே எனக்கு த்ருப்தி. பணத்திலேயே துளேயும் உங்களுக்கு உலகத்தின் போக்கு எங்கு தெரியப்போகிறது.

நிற்க நிழலின்றி, உடுக்க உடையின்றி, குடிக்கக் கூழின்றித் தவிக்கும் ஏழைகளின கஷ்டம் தெரிந்தால் இந்த அனாவசியச் செலவு செய்வீர்களா? காயும், கறியும், பழமும், பக்ஷணங்களுமாய்த் தின்ற உங்கள் பந்துக்கள் வாழ்த்துகிறார்களா, அல்லது இந்தப் பரதேசிகள் வாழ்த்துகிறார்களா? எனறு யோசித்துப் பாருங்கள்.

உண்மைப் பசி அறிந்து புசிப்பவனுக்குத்தானே அன்னத்தின் ருசி அறிந்து சாபபிட முடியும். பசி எனபதையே அறியாதவர்களுக்குப் பசி எங்கு தெரியபபோகிறது. அவர்களின குறறம் குறைகளுக்குத்தான ஆளாக வேண்டுமே தவிர அவர்கள் த்ருப்தியை அடைய மாட்டார்கள்.

அனாவசியமாய் இவ்வளவு பணத்தை வீண்செலவு செய்ததை ஏழைகளுக்கு நிரந்தரமாய் குடிசைகள் போட்டுக் கொடுத்தோ, துணிகள் வாங்கிக் கொடுத்தோ உதவி செய்து இருந்தால் எவ்வளவு அழகாய், பரோபகாரமாய் இருந்திருக்கும். ஊம. நடக்கட்டும். நான சொல்வது செவிடன காதில் சங்கு ஊதுவதுபோல் வியர்த்தம்தான். உங்கள் இஷ்டப்படியே நடக்கட்டும் என்று பெரிய பரசங்கம் செய்து பதிலுக்கு எதிர்பார்க்காமல் விருவிரு என்று தன் மாடி அறைக்கு விரைந்தான.

அவ்வளவு நேரமும் பதில் சொல்ல முடியாது திணறிய மங்களத்தின சிந்தனைகள் நாலாபுறமும் பாய்ந்தது. அவ்வளவு நேரமும் ஏதோ ஒரு மகான் தனக்கு உபதேசித்ததைப்போல் தோன்றியதே தவிர தன மகனதான் பேசினுன என்பதையே மறந்தாள். அவன் எடுத்துச் சொன்ன ஒவ்வொரு சொல்லும் வண்டு மதுவைக் கண்டு ரீங்காரம செய்வதைப்போல் அவள் காதுகளைத் துளேத்தது. அவ்வளவு நேரம் குற்றமாகவே தோன்ருத அதே வார்த்தைகள் சுருக்கென்று தைத்தது.

அன்று பகல் சில பந்துக்கள் பேசிக்கொண்ட வார்த்தைகள் காதிலே ஒலித்தது. "ஆமாம! என்னவாம் அபபடி ஷ்ரமாதமாய்ச் செய்துவிட்டாள். தன் மருமகளுக்கு வைர பில்லேயும, தங்கிடி புடவையும் வாங்கிவிட்டது ஒரு தடபுடலாகுமா?"

"ஆமாம்! அதைத்தான நான் கேட்கிறேன். தனக்கே செய்து கொள்வதில் எனன அதிசயம? ஏதோ நான ப்ரமாதமாய் மனப பால் குடித்துக்கொண்டு வண்டி சாஜிக்குக்கூடக் கஷ்டபபட்ட வாறு ஓடிவந்தேன. மலைபோல் பெணணை வைத்துக்கொண்டு கல்யாணம் செய்யப் பணம் இல்லாது தவிக்கிறேன். ஏதோ தர்மமாக 500 ரூபாயாவது கொடுபபாள் என்று பார்த்தேன. கை கருணைக்கிழங்குதான."

"அதைச் சொல்கிறாயே. பணக்காரிகளாய்ப் பார்த்து பட்டு பட்டாய்ப் புடவை வைத்துக் கொடுத்தாள். ஒரு பட்டு புடவைக்கு எங்கும் நம்போன்றவர்களுக்கு சாதா மட்ட நூல் புடவைதான். அதையும் முகத்தைப் பார்த்துக் கொடுக்கிறாள். போதுமே! என்ன ஜம்பம் வேணடி இருக்கிறது."

"இவ்வளவுதானா நீ கவனித்த அழகு. சாப்பாடு போடுவதில் எவ்வளவு வேற்றுமை தெரியுமா? பணக்காரிக்குப் பத்து தடவை உபசாரணை. நாம் இரண்டாந்தரம் கேட்டால்கூடக் கிடையாது. என் குழந்தை ஜாங்கரிக்கு அழுது அழுது தூங்கிவிட்டது. அந்த அழகில் பரதேசிகளுக்குச் சமாராதனையாம். இந்தப் பிச்சைக் காரப் பீடைகளுக்குப் போட்ட சாப்பாட்டைச் சொல்லிச் சொல்லி மகிழ்கிறாள். "சோத்துக்கு முந்திக்கோ சண்டைக்குப் பிந்திக்கோ" என்று ஒரு வசனம் உண்டு அதுபோல் சோறு எங்கு கிடைக்கும் என்று திரியும் சோம்பேறிக்குச் சாப்பாடு. அதுதான் இவள் தலையில் புண்ய மூட்டையைச் சுமத்தப் போகிறது, போயேன!"

என்று பேசிக்கொண்டவர்களின் பல குரல்கள் இவள் மனக் குழப்பத்தை இன்னும் குழப்பியது. எவ்வளவு நேரம்தான் அப்படியே ஸ்தம்பித்து நின்றாளோ அதை அவளே அறிய மாட்டாள்

"அம்மா! மாதவி உட்காரமுடியவில்லை என்று கூப்பிடுகிறாள்" என்ற குரல் கேட்டு மங்களம் திடுக்கிட்டவளாய்த் திரும்பினாள். ஐயோ எல்லோர் கண் த்ருஷ்டியும் பட்டு மாதவிக்கு ஏதாவது உடம்பு வந்துவிட்டதா என்ன? என்று அலறியவாறு பந்தலுக்கு ஓடினாள். (தொடரும்)

---

# அறிஞர்களின் அமுதவாக்கு

அஸ்வின்

அறிவு நிறைந்த அறிஞர்கள் காம் நல்முறையில் வாழ பற்பல அமுதவாக்குகளை அள்ளி வீசியுள்ளனர். நம் இந்தியாவிலுள்ளவர்களும், வெளிநாட்டினரும் கூறியுள்ள மறக்கக் கூடாத மொழிகளை எனக்குத் தெரிந்தவரை தொகுத்துக் கூறுகிறேன்.

(1) சற்று இளைப்பாறு. யோசனை இல்லாமல் பரபரப்புடன் வாழ்நாளை அதிகமாக வீணாக்காதே—லாங்பெல்லோ

(2) கெட்டதைக் கண்டு ஏளனம் செய்வதைவிட நல்லதுக்குச் சண்டையிடுவது மிகவும் நல்லது—டென்னிஸன்

(3) தத்தளித்துக் கொண்டிருக்கும் மனதில் உண்டாகும் சாந்தமானது யுத்த களத்தில் உண்டாகும் ஜெயத்திலும் மிகவும் மேலானது—டிக்கன்ஸ்

(4) நாம் நம்முடைய ஜீவதசையில் எந்தக் காரியம் செய்யும் பொழுதும் நமக்குபபிக்தி வரப்போகிறவர்களைப் பற்றி எப்பொழுதும் நினைத்தல் வேண்டும்—ரஸ்கின்

(5) மற்றவர்களின் வைதலுக்குப் பயந்து நம்முடைய முக்கியமான காரியங்களைச் செய்வதினின்றும் பின் வாங்கக் கூடாது—ஷேக்ஸ்பியர்

(6) மனிதர்களை நம்பு. அவர்களும் உன்னிடத்தில் உண்மையாய் இருப்பார்கள். அவர்களை மேன்மையாய் நடத்து. அவர்களும் மேன்மை யுடையவர்களாவார்கள்—எமர்ஸன்.

(7) அந்தோ! எவ்வளவு அல்ப காரணமானது நன்ருய் நேசிக்கும் இரு மனங்களை வேறுபடுத்த சக்தியுள்ளதாயிருக்கிறது.—மூர்.

(8) அடுத்தபடியாக ஜார்ஜ் மாக்டனல்ட் என்ற அறிஞர் ஜூன் மாதத்தின் சிறப்பை விவரிக்கிருர்.

ரோஜா புஷ்பங்கள் உலகத்தை மிகவும் இன்பமாக்குகிறது. அதே மாதிரி தேனீக்களும் சங்கீதத்தினுல் இனிமையாக்குகிறது. ஜூன் மாதம் அவ்வளவு வெளிச்சமும் அவ்வளவு உஷ்ணமும் அவ்வளவு சந்தோஷமுமாக இருக்கிறது.

(9) ஒரு பகுத்தறியும் ஜந்துவுக்கு ஜீவன் தகுதியுள்ளதாக இருக்கவேண்டுமானுல் அது வரவர முன்னேற்றத்தை அடையவேண்டும்—ஜான்ஸன்.

(10) ஒவ்வொரு நிமிஷமும் நல்ல காரியங்களைச் செய்ய தேக வலிமையை அடை. ஆனுல் கடின ஹிருதயத்தை யடையாதே—ஜே. ஆர். லவல்.

(11) மற்றவர்கள் நம்மை எவ்விதம் காண்கிருர்களோ அதே மாதிரியாக நாம் நம்மைப் பார்த்துக்கொள்ளும்படியான சக்தியை நமக்குக் கடவுள் கொடுப்பாராக. அது நம்மை அநேக குற்றங்களினின்றும், மூட அபிப்பிராயங்களினின்றும் விடுவிக்கும்—பர்ன்ஸ்

(12) நீ எந்த இடத்திலிருந்தாலும் பெரியோர்களின் ஆசீர்வாதங்கள் உன் உள்ளிருக்கும் ஹிருதயத்தின் மேல் வர்ஷிக்கின்றன—பெலிஷியா ஹேமன்ஸ். (தொடரும்)

# திருவரங்கம் பெரியகோயிலும் திருநெடுந்தாண்டகமும்

ஸ்ரீகாஞ்சி மஹா வித்வான் ப்ர. அண்ணங்கராசார்ய ஸ்வாமி

மார்கழிமாதத்து சுக்லபக்ஷ ஏகாதசி (வைகுண்டஏகாதசி)க்கு முன் பத்து நாளிலும் பின் பத்து நாளிலும் பகற்பத்து இராப்பத்து என்கிற திருவத்யயநோத்ஸவம் ஸ்ரீவைஷ்ணவக் கோவில்களெல்லாவற்றிலும் அநாதி காலமாக நடைபெற்று வருகின்றது. இம்மஹோத்ஸவம் திருவரங்கம் பெரிய கோயிலில் ஆதி காலத்திலிருந்தே விசேஷவைபவம் பொலிய நடைபெற்று வருவதை உலகமெல்லாமுணரும். பகற்பத்துத் தொடக்கத்திற்கு முன்னாளில் "திருநெடுந்தாண்டகம்" என்று ஸ்ரீரங்கம பஞ்சாங்கத்தில் பதிப்பித்திருப்பதையும், அப்படியே ஸ்ரீரங்கத்தில் அது நடந்துவருவதையும் யாவருமறிவர். இத்திருநெடுந்தாண்டக ஸேவையென்பது ஸ்ரீரங்கத்தில் மாத்திரமேயன்றி வேறு எந்த திவ்ய தேசத்திலும் நடைபெறுவது இடையாது. இத்திருவத்யயநோத்ஸவத்தில் பகற்பத்து சாத்துமுறையன்று (வைகுண்ட ஏகாதசிக்கு முன்னாளில்) திவ்ய பரபந்தங்களின வரிசைக் கிரமத்தில் திருநெடுந்தாண்டகம ஸேவிக்க ப்ராபதமாகிறது

கோயிலில் அன்றைக்கும இது ஸேவிக்கபபடுகிறது. அப்படியிருக்க, உத்ஸவாரமபத்திற்கு முன்னாளில் தனியே திருநெடுந்தாண்டகம் எதற்காக ஸேவிக்கப்படுகிறதென்பதைப் பற்றிப் பலர்க்கு ஜிஜ்ஞாஸையிருக்கக் கூடும். இதைபபற்றித் தெரிவிக்கிறோமிங்கு

எம்பெருமானார், யாதவப்ரகாசர் யஜ்ஞமூர்த்தி முதலியவர்களான பல அத்வைதி வித்வான்களைத் திருத்திப் பணிகொண்ட முறையில் மேல்நாட்டில் [திருநாராயணபுர ப்ராந்தத்தில்] மாதவாசார்ய ரென்றும் வேதாந்தி யென்றும் ப்ரஸித்தராயிருந்த ஓர் அத்வைதி வித்வானையும் திருத்திப பணிகொள்ளத் திருவுள்ளம் பறறியிருந்தும் அஃது அவருடைய வாழ்நாளில் நிறைவேறாதொழிந்தது. கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டர் இளமையிலேயே மஹா மேதாவியாய் விளங்கினபடியாலே அவரால் இப்பணி நிறைவேறுமென்று திருவுள்ளம்பற்றி இதை அவர்க்கு நியமித்துத் திருநாட்டுக்கெழுந்தருளினார் ஸ்வாமி யெம்பெருமானார். பிறகு பட்டர் ஆசார்யபீடததை யலங்கரித்து உபய வேதாந்த ப்ரவசநம் செய்தருளுகிற நாளிலே, மேல்நாட்டிலிருந்து கோயிலுக்குவருகிறவர்கள் பட்டருடைய காலக்ஷேப கோஷ்டிக்கும் வருவர்கள. அபபோது ப்ரஸங்காத் அந்த மாதவாசார்யருடைய வித்யா வைபவங்களைச் சொல்லுவர்களாம. அவர் ஷட்தாசனத்திற்கும் ஷடாஸனமிட்டு வீற்றிருந்து விளங்குகிற பெருமைகளையெடுத்துக்கூறுவர்களாம். பட்டர் அப பெரியாரைத் திருத்திப்பணி கொள்ள விரும்பியிருப்பவராதலால் 'நீங்கள் மீண்டு அப்பெரியாரிடம் செல்லும்போது நம்மைபபற்றிச் சொல்லுங்கள்' என்ன; அவர்களும் அப்படியே அங்குப்போய் பட்டருடைய பெருமைகளைப்பற்றி விசேஷமாகச் சொல்லுவர்களாம. மறுபடியும் ஒருகால் அவர்கள் கோயிலுக்கு வந்தபோது பட்டரைச் சந்தித்து "தேவரீரைப்பற்றி வேதாந்திகளிடம் பலபல சொன்னோம்,"

என்றார்களாம். அப்போது பட்டர் "என்னவென்று சொன்னீர்கள்?" என்று கேட்க, "தேவரீருக்கு தர்க்க வ்யாகரணமீமாம்ஸாதி ஸகல சாஸ்த்ரங்களும் வரும் என்று சொன்னோம்" என்ன, "நமக்குத் திருநெடுந்தாண்டக சாஸ்த்ரம் வரும் என்று சொல்லிற்றிலீரோ? இனி ப்ரஸ்தாவத்தில் இதைச் சொல்லுங்கோள்" என்று பட்டர் நியமிக்க; அவர்களும் சென்று அப்படியே சொல்ல, அவர், அந்த சாஸ்த்ரம் எப்படிப்பட்டதோவென்று விஸ்மய விவசராயிருந்து வந்தார்.

இப்படியிருக்கையில் ஒரு ஸமயம் பட்டர் மேல்நாட்டுக்குப் புறப்பட்டு அந்த வேதாந்திகளிடம் சென்று தர்க்கபிக்ஷைகேட்டு அவரோடு வாதம் செய்கையில், "ஏற்கெனவே நாம் கேட்டிருந்த வ்யக்திவிசேஷம இவரே" என்று தெரிந்துகொண்டு "திருநெடுந்தாண்டக சாஸ்த்ரம வல்லவர் நீரேயோ?" என்ன, ஆம் என்ன, ஆகில் அது தன்னைச் சொல்லவேணும் என்ன, உடனே பட்டர் திருநெடுந்தாண்டகத்தின் அரும்பெரும் பொருள்களை யெடுத்து அற்புதமாக உபந்யஸித்தருள, அதுகேட்ட அவர் பரவசராய் "ஸ்ரீதாஸ்மி; அடியேனை இனி அடிமை கொண்டருளவேணும்" என்று சொல்லி வேரற்ற மரம்போல திருவடிகளிலே விழுந்து ப்ரார்த்திக்க, அப்போதே அவர்க்குத் திருவிலச்சினையும் பாஸாதித்துத் திருமந்த்ராதிகளையும் உபதேசித்து க்ருதார்த்தராக்கியருளினார்.

இந்த நிகழ்ச்சி நடைபெற்றது கார்த்திகை மாதத்தில். அப்போது கோயில் அத்யயன வுத்ஸவம் அணித்தாயிருந்தபடியாலே அதற்கு உதவவேணுமென்று திருவுள்ளம்பற்றின பட்டர் அங்கு நின்றும விரைந்து புறபபட்டு அத்யயநோத்ஸவத் தொடக்கத்திற்கு முன்னாள் திருவரங்கம் பெரியகோயில் வந்து சேர்ந்தார். அநுஷ்டானங்களை நிறைவேற்றிக்கொண்டு மாலைப்பொழுதில் பெரிய பெருமாளை மங்களாசாஸனம் செய்ய ஸன்னிதிக்கு எழுந்தருளின வளவிலே "மேல் நாட்டுக்குச் சென்ற காரியம் நிறைவேறப்பெற்றதோ?" என்று பெருமாள் [அர்ச்சகமுகேந] கேட்டருள, "தேவரீர் திருவருளாலே ஒரு குறையுமின்றிக்கே நிறைவேறப்பெற்றது" என்று விடைகூற, 'அதுதான் எங்ஙனே' என்று கேட்டருள, இங்ஙனே என்று சொல்லி, வேதாந்திகளின் முன்னே உபந்யஸித்த கட்டளையில் திருநெடுந்தாண்டகத்தை உபந்யஸித்தார் பட்டர். பெரியபெருமாளும் திருச்செவிசாத்திப் போரவுகந்தருளி "ஆண்டுதோறும் இங்ஙனே நாம் இதுகேட்கப் பெறவேணும" என்றருளிச்செய்ய, அந்த நியமனத்தை யடியொற்றியே நாளைக்கும் இது நடந்துவருகிறது.

முதன் முதலாக இது தன்னை பட்டர் உபந்யஸித்தபடியாலே பட்டர் ஸந்ததியாரன்றோ இதனை இப்போதும் உபந்யஸிக்கவேணும்; அப்படியன்றிக்கே அரையர்களே ஸேவிக்க ப்ராப்தமாயிருக்கிறதே; இது ஏன்? என்று சிலர் கேட்கக்கூடும். கேண்மின். இது இப்போது உபந்யாஸ ரூபமாகவன்றிக்கே திவ்ய ப்ரபந்த வேவாபாரச்ரிமையமாக நடந்து வருவதாலும், இஃது அரையர்களின் உரிமையில் சேர்ந்ததாகையாலும் அப்போதே பட்டர் தாமே இவ்வதிகாரத்தை அரையர்களுக்கு ஒப்படைத்து விட்டாரென்று கேட்டிருக்கை. திருநெடுந்தாண்டகப் பாசுரத்தை

அபிநயிப்பதும், பாசுரவ்யாக்யானம் ஸேவிப்பதும், பாசுரங்களைத் தாள்விசையோடு ஸேவிப்பதுமான பத்ததியே இப்போது நடந்து வருகின்றது. இது அரையர்களுக்கே உரித்தான கைங்கர்யமாயிற்று. இது நம்பெருமாள் ஸந்நிதிதவிர மற்றவிடங்களில் நிகழ ப்ரஸக்தியில்லாமையாலே கோயிலுக்கே இது அஸாதாரணச் சிறப்பாயிற்று.

திருநெடுந்தாண்டக வுபந்யாஸத்தினால் பட்டர் திருத்திப் பணிகொண்ட வேதாந்திகள் பிறகு உத்தமாச்ரமஸ்வீகாரம் செய்து நஞ்சீயரென்று ப்ரஸித்தரானார், அவரே நம்பிள்ளையினுடைய ஆசார்யர். அவர் கோயிலிலே உபய வேதாந்த நிர்வாஹகராக எழுந்தளியிருந்து, திருவாய் மொழிக்கு ஒன்பதினாயிரப் படியென்கிற வ்யாக்யான மருளிச்செய்தது மன்றியில், அருளிச்செயல்களில் பட்டர்க்கு விசேஷார்த்தங்கள் ஸ்புரிப்பதற்கும் இவர் ஹேதுவாயிருந்தாரென்னுமதிசயங்கள் வ்யாக்யானங்களிலே உணரத் தக்கன.

ஒரு விசேஷமே இங்கு உணர்த்தி நிற்கிறோம். ஒரு ஸமயம் பட்டர் திருவிருத்தம் உபந்யஸித்தருளாநின்றார். அதில் (பா. 94) மைப்படி மேனியும செந்தாமரைக் கண்ணும் என்கிற பாசுரத்திற்குப்பொருள் அருளிச் செய்கையில் 'மைபபடி மேனி' என்பதற்கு 'தன்னை யநுஸந்தித்தவர்களின நெஞ்சிலே இருள்படியும்படியான திருமேனி' என்று பொருளுரைத்தார் பட்டர். இவ்வர்த்தத்திற்குத் தகுந்த ப்ரமாணம் காட்டினாலல்லது இது ரஸிக்கமாட்டாது; ஆனால் இதற்குத் தகுந்த பரமாணம பட்டருடைய திருவுள்ளத்தில் சடக்கென ஸ்புரிககவில்லை; அபபோது அந்த கோஷ்டியில், விழுப்பரையர் ஆபபான திருவழுந்தூரரையர்முதலான அருளிச்செயல் விரகர்கள் பலரும் இருந்தும் அவர்களுக்கும் உதப்புத்தமாகவில்லை; அபபோது அந்த கோஷ்டியில் ஒரு மூலையிலிருந்த நஞ்சீயர் "இனனாரெனறறியேன" என்கிற பெரிய திருமொழிப் பாசுரத்தை மந்தஸ்வரமாக எடுத்துக்கூற, அது பட்டருடைய திருச்செவியிலே விழுந்தது. "அநுஸந்தித்தவர்களுடைய நெஞ்சிலே இருளபடியுமபடியான திருமேனி" என்று பட்டரருளிச்செய்த அர்த்தவிசேஷத்திற்கு இப்பாசுரந்தான் தகுந்தப்ரமாணம். நாலாயிர திவ்ய ப்ரபந்தததிற்குள் வேறு பாசுரமில்லை. "இன்னாரென்றறியேன" [பெரியதிருமொழி 10-10-9] என்னுமிந்தப் பாசுரம—அநுஸந்தித்தவருடைய நெஞ்சை இருளப்பண்ணும் திருமேனி யென்னுமிடத்தை நன்கு மூதலித்துத் தருகின்றது. இப்பாசுரம் பட்டாககும் ஸ்புரிக்காமற்போனது வியக்கத் தக்கதே. அவருடைய திருச்செவியில் இப்பாட்டின் துணுக்கை விழுந்தவாறே அவர் திருவுளளம பூரித்து "இது சொனனவர் யார்?" என்று கோஷ்டியில் கேட்க, நஞ்சியருடைய பக்கத்திலே யிருந்தவர்கள் 'இது சொன்னவர் ஜீயர்' என்றார்களாம். அது கேட்டு பட்டருக்கு உண்டான திருவுள்ளப்பூரிப்பு வாசாமகோசரம். நஞ்சியருடைய பூர்வாவஸ்தையை பட்டர் தாம் நன்கறிந்தவராகையாலே அவர் அபரவயஸ்ஸிலே அருளிச் செயல் கற்றதற்கும், தமக்கும் ஸ்புரியாததை நினைபபூட்டும்படியான பெருவிரகரானதற்கும் மிக மிக வியந்து, "நூறறுக்காதத்துக்கு அவ்வருகேபிறந்து நாக்கு இமமஹோபகாரம செய்வதே!" என்று மிகவுமீடுபட்டுக் கொண்டாடினாரென்று திருவிருத்த வ்யாக்யானங்களிரண்டிலுமுள்ளது. இங்ஙனே மற்றும் பல உள.

# நம்புவீர்களா?

## சாமியாரம்மாள் 1.

நாஸ்திகம் தலைவிரித்துத் தாண்டவம் செய்யும் இந்த காலத்தில் கடவுளையும் கடவுள் பக்தி மிகுந்த பக்தர்களையும் அலக்ஷியம் செய்தும் ஏளனமாகப் பேசி எக்காளமிட்டும் நடக்கும் இக்காலத்தில் கண்ணுக்கு முன்பு ப்ரத்யக்ஷமாக நடக்கும் சில உண்மைகளைக் கேட்டும—கண்டும்—படித்தும்—அறிந்தபிறகாவது உலகம் அதை நம்புமா! நம்புவதற்காகவும் மக்களின் இதய பூமியில் நம்பிக்கையுடன் பக்திப் பயிரை வளர்க்கச் செய்வதற்காகத்தான் இத்தகைய சம்பவங்களை பகவான் நடத்திக் காட்டுகிறார் போலும். இது கட்டுக் கதையல்ல: நூற்றுக்கு நூறு உண்மை. சில மாதங்களுக்கு முன்பு நடந்த ஒரு உண்மை.

ஒரு அம்மாள் ஆதியில் சாமான்ய ஞானத்துடன் உலகத்தவர்களைப்போலிருந்தவர்கள். ஒரே ஒரு பெண் குழந்தையை வைத்துக்கொண்டு விதவையாகி விட்ட பின்னர் ஞானக் கண் திறந்து ப்ரகாசிக்கவாரம்பித்தது. அபாரமான படிப்புப் படித்துப் பண்டிதையாகி விட்டாள். பாண்டித்யமடைந்த செருக்குடன் சும்மா நின்று விடாமல் வேதாந்த தத்வ ஆராய்ச்சியிலீடுபட்டு மோனகுருவின் உபதேசத்தைப் பெற்று சாமியாரம்மாள் என்றால் மிகையாகாது—அத்தகைய நிலைமைக்கு வந்துவிட்டார்.

வாழ்க்கைக்கு வேண்டிய பொருளுதவிக்கு ஒரு உத்தியோக நிலையத்திலும் வேலையில் இருந்துகொண்டு பேரன் பேத்திகள் எடுத்தும் பற்றில்லாது தாமரை நீர்த்துளிபோன்று வாழ்க்கை நடத்துகிறார்கள். சதா தெய்வ த்யானமும் குருபக்தியுமே உருக்கொண்டிருக்கும் நிலையைக் கண்டு அவருடன உத்யோக சாலையில் கூட இருக்கும் சிலர் சாமியாரம்மாள்...போலி வேஷம் என்று நகைத்துப் பரிகஸித்தார்களாம். அதில் ஒருவர் இந்தம்மாளைப்பற்றி மேலதிகாரியிடம் குற்றமாகவும் ஏளனமாகவும் பேசிச் சிரித்தாராம்.

அன்றிரவு பேசிச் சிரித்த மனிதரின் சொப்பனத்தில் ஒரு பெரிய குரங்கு வந்து பயங்கரமாக எதிரில் நின்று மென்னியை அமுக்குவதுபோல் அமுக்கி கடவுள் பக்தியை ஏளனமா செய்தாய்!, என்று இடித்துக் காட்டி உறுமியதாம். அந்த அதிர்ச்சியில் அலறியடித்துக்கொண்டு எழுந்த மனிதனின் மூளையில் தான் செய்துவிட்ட தவறுதல் அப்போதுதான் நன்றாக உறுத்தி உணரச் செய்ததாம். மறுதினமே ஆபீஸுக்கு வந்து இந்த நடந்த விஷயத்தை முதல்நாள் யாரிடம் பேசிச் சிரித்தாரோ அவரிடமே வந்து, "நான் மகத்தான அபசாரம் செய்துவிட்டேன். பகவான் அதை நன்றாகக் காட்டிக் கண்டித்துவிட்டார். அந்தம்மாளின் பக்தியில் மாசு மருவில்லை என்பதை உணர்ந்துவிட்டேன்...என்று கூறினாராம். அடுத்த இதழில் கடவுளின் மற்றொரு விசித்திரம்.

# 22

## நினைப்பதும் நடப்பதும்

குளிர்ந்த காற்று சிலுசிலுப்பான சாறலுடன் வாடையடித்து எல்லோரையும் குளிரால் நடுங்கச்செய்யும் நிலையில் பவானிக்கு மட்டும் எரிமலையே தலைமீது விழுந்துவிட்டது போன்ற மகத்தான அதிர்ச்சியை அடைந்து தத்தளிக்கும் படியிருந்தது. அச்சமயம் இன்ஸ்பெக்டரே நேரில் வந்து விட்டார் என்றால் பவானியின் நிலைமை எப்படித்தானிருக்கும்? தன் கணவனுக்கு ஏதோ மகத்தான விபரீதசோதனை தான் நேர்ந்துவிட்டது என்ற நடுக்கலுடன் அபாரமாய் அடித்துக் கொள்ளும் ஓட்டத்தின் வேகத்தில் இதயம் அப்படியே நின்றுவிடும்போலாகி விட்டது. இச்சமயம், தான் எப்படித் தன் கணவனைக் கப்பாற்றுவது என்று பதைபதைக்கும் நிலையில் உலகமே தட்டாமாலை சுற்றுகிறது. இன்ஸ்பெக்டரின் குரல் சமீபத்தில் வருவதைக் கேட்கக் கேட்க ஏதோ ஒரு பயங்கரமான பாணம் தன்னை நோக்கி வருவது போல் அதிர்ச்சி உண்டாகியது.

இத்தனை தர்ம சங்கடமான குழப்பத்தின் மத்தியிலும் சடக்கென்று ஒரு யோசனை தோன்றியது. மெல்லிய குரலில் "நீங்கள் உடனே போய்விடுங்கள்; இங்கு நிற்க வேண்டாம். மறுபடியும் சந்திக்க வசதி கிடைத்தால் உங்கள் தாயாரிடம் நான் இருப்பேன்; அங்கு வந்து பாருங்கள்; போய்விடுங்கள்" என்று கூறி இருட்டிலனுப்பி விட்டு இன்ஸ்பெக்டரை எதிர்நோக்கி ஓடிவந்து இன்ஸ்பெக்டரே எதிர்பாராத விதமாய் அவர் காலில் விழுந்து வணங்கியவாறு "ஐயா! என்னை மன்னிக்க வேண்டும். நான் ஒரு பெரிய குற்றத்தைச் செய்துவிட்டேன். அதை உங்களிடம் தெரிவிப்பதற்காகவே நான் ஓடி வருகையில் நீங்களே வந்துவிட்டீர்கள். என்னை மன்னிக்க வேண்டும்" என்று காலையே பிடித்துக்கொண்டு விட்டாள்.

விவரமே புரியாத இன்ஸ்பெக்டர் "அம்மணீ! காலை விடுங்கள்" என்று அதிகாரமற்ற அன்பு கலந்த குரலில் கேட்டார்.

பவா:—என்னைப் பெற்ற பிதாவைப் போலத் தங்களை எண்ணிக் கேட்கிறேன். என்னை மன்னிப்பதாக வாக்குக் கொடுத்து ரக்ஷிக்க வேண்டும்............இங்கு காவலிருக்கும் சேவகரின் மனைவிக்கு மிகவும் கடுமையாகக் காய்ச்சல் காய்கிறதாம். திக்கில்லாமல் கிடக்கிறுளாம் பாவம்! அவர் தவியாய்த் தவித்துத் துடித்தார். என் மனஸு கேட்க வில்லை. நான் அதிக ப்ரஸங்கித்தனமாக அவரை வீட்டுக்கு அனுப்பி மனைவியை ஒரு முறை பார்த்துவிட்டு வரும்படி அனுப்பி விட்டேன். அவர் போக மிகவும் மறுத்தார். நான்தான் அவருடைய மனவேதனையைத் தாங்காமல் கெஞ்சிக் கூத்தாடிப் போகச் சொன்னேன். போலீஸ் அதிகாரிகளின் உத்திரவின்றி நான் செய்துவிட்ட இந்த மகத்தான குற்றத்திற்கு மன்னிக்க வேண்டும். ஒரு குற்றத்தோடு மூன்று குற்றங்களைச் செய்துவிட்டேன். அந்த மனிதர் போகமாட்டேன் என்று என்னையே அவர் கோபித்துக் கொண்டார். அவர் மனைவிக்கு நினைவே தப்பிவிட்டதென்றும் அல்லகல்லோல நிலைமையிலிருப்பதாகவும் அவர் சொல்லியது உண்மையா என்று நான் நேராகச் சென்று பார்த்து வரும்படி ஆளையனுப்பினேன். அது முற்றிலும் உண்மை என்று தெரிந்ததால் போலீஸ் அதிகாரியே போகும்படி உத்திரவு கொடுத்ததாக நானே ஏறக்குறைய போலீஸ் உடையைப்போன்ற மில்ட்ரி உடையணிந்துவந்து அவரிடம்கூறி அவரையனுப்பிவிட்டு நானே இங்கு காவலிருந்தேன். தாங்கள் வருவதைப் பார்த்ததும் உடனே உடைகளைக் களைந்தெரிந்து விட்டு ஓடி வந்தேன். இதோ அந்த உடைகள்—என்று முருகப்பன் களைந்து போட்டுவிட்டுச் சென்ற உடைகளைக் காட்டினுள்.

இன்ஸ்பெக்டருக்கு வரும் ஆத்திரமும் துடிதுடிப்பும் கூறத் திறமே இல்லை. கண்கள் சிவக்கின்றன; மீசை துடிதுடிக்கிறது. பல்லைக் கடித்துக்கொண்டு பவானியை ஒரு பார்வை பார்த்தது அவளை விழுங்கிவிடுவார்போலிருந்தது. "இதென்ன நாடகமேடை என்று நினைத்து விட்டீர்களா? அல்லது உங்கள் வீட்டுக் கையாள் செய்யும் வேலை என்று பார்த்தீர்களா? அதிகாரத்திலும் போலீஸ் அதிகாரத்தின் உச்சஸ்தானம் எத்தகையது என்பதை மறந்து போய் விட்டீர்களா! அல்லது உங்கள் கொலைகாரக் கணவனின் மனைவி நான்தான் என்பதை நிரூபிக்க

நீங்களும் இத்தகைய விஷமச் செய்கைகளை ஆரம்பித்து விட்டீர்களா" என்று இன்னும் ஏதேதோ சொல்வதற்குள் அலையக்குலைய ஒரு கான்ஸ்டேபில் ஓடிவந்து வழக்கப்படி ஸெல்யூட் வைத்து, எஜமான்! 'வீட்டில் அம்மாவுக்குத் திடீரென்று மாரடைப்பும் மயக்கமும் உண்டாகி விழுந்து விட்டார்கள். குழந்தைகள் அழுகிறார்கள். உடனே டாக்டருக்குப் போன்செய்து வரவழைத்தேன். டாக்டர் உடனே உங்களை அழைத்துவரச் சொன்னார். டாக்ஸி கொண்டு வந்திருக்கிறேன். உடனே வாருங்கள்'' என்று கூறியதைக் கேட்டதுதான் தாமதம். தீயை மிதித்தவர்போலத் துள்ளித் தவித்தவாறு 'என்ன....அம்மாளுக்கா மார்வலி....ஐயோ!'' என்று தலையில் கையை வைத்துப் பிடித்துக் கொண்டார்.

பவானி மிகமிக தைரியசாலியும் கூரிய மதியுடையவளுமாகையால் "ஐயா! இப்படியேதான் அந்த சேவகர் மணிக் கணக்காகத் தவித்தார். மழையும்கூட கொட்டுவதால் நான் என்ன தண்டனை விதித்தாலும் ஏற்றுக்கொள்ளத் துணிந்து அவரை வீட்டுக்கு அனுப்பினேன். அவருடைய மனவேதனைக்கு முன்பு என்னுடைய வேஷத்தைக்கூட அவர் கவனிக்கவில்லை. போலீஸ்காரர்களின் நம்பரும் பில்லையும் பெல்டும் இல்லாததுகூட கவனிக்கத் தோன்றாமல் போய்விட்டார் பாவம்!......தாங்கள் உடனே போய் பாருங்கள். அம்மாவுக்கு ஒரு குறைவும் இல்லாதபடி பகவான் ரக்ஷிக்க வேண்டுகிறேன்'' என்று சமயம்பார்த்து பவானி சொல்கிற வார்த்தை இன்ஸ்பெக்டரின் காதில் விழவே இல்லை. எனினும் தன் மனைவிக்கு உடல்நலம் சரியில்லை என்றதைக்கேட்டவுடனே தன்னிதயத்தில் செய்யும் சங்கடத்தைப் போலத்தானே அந்தச் சேவகனுக்கும் தோன்றும் என்ற உணர்ச்சி மட்டும் குபீரென்று தோன்றியது. உடனே பவானியைப் பார்த்து "அம்மணீ! இந்த ரகஸியத்தை அந்தப் போலீஸ்காரனுக்குக்கூட சொல்லவேண்டாம். தற்சமயம் எனக்குப் பேசக்கூடத் தெரியவில்லை, நான் போகிறேன்" என்று பதைபதைக்கச் சொல்லியபடியே போய்விட்டார்.

அடாடா! பவானிக்கு இந்த நிமிஷம் தான் நிற்பது பூமியா! சொர்க்கமா! என்பதே புரியாத ஒரு ஆநந்த உணர்ச்சி அபாரமாகப் பொங்கி விட்டதால் மானஸீகமாகப் பகவானை வணங்கித் துதித்துவிட்டு புறக்கடைக் கோடிக்கு ஓடினாள். இவ்வளவு எளிதில் கனவிலும் நினைக்க முடியாதவிதம் சுலபமாக இந்த ஆபத்துத் தீர்ந்துவிடும் என்று நினைக்காததால் ஓடிவிடும்படி சொல்லி விட்டேனே

அவர் போய்விட்டிருப்பாரா! என்ற ஆவலுடன் கோடி வரையிலும் சென்று வெளிப்புறமும், கொட்டும் மழையில சொட்டச் சொட்ட நனைந்தவாறு பார்த்தாள். கண்ணுக் கெட்டியவரையில் ஒன்றும் புலப்படவில்லை. "ஐயோ! அவஸரப்பட்டு அவரை யனுப்பிவிட்டேனே!" என்று மனங்கலங்கித் தவிக்கையில், பவானி! பவானி என்று கிணத்திற்குள் குரல் கேட்டதும் ஒருவித மகிழ்ச்சியுடன் ஓடிவந்து ஐயோ! இதென்ன சோதனை வெளியே வாருங்கள் என்று கூப்பிட்டாள்.

முருகப்பனும் தைரியமாக வெளியே வந்து மறுபடியும் அந்த போலீஸ்காரன் உடைகளையே அவஸர அவஸரமாக அணிந்துகொண்டான். பவானி வெகு துணிச்சலுடன் "ஸ்வாமீ! மழையானல் பாதகமில்லை, நான் உங்கள் தாயாரிடம் போய்விடுவதாகத் தீர்மானித்து விட்டேன். குழந்தையுடன் நான் புறப்பட்டு வருகிறேன். தாங்களே போலீஸ்காரன் உடையிலேயே என்னை அங்கு கொண்டு விட்டு விடுங்கள், நான் இதோ வருகிறேன். நீங்கள் மூலை கேட்டிற்குஅருகில் இருங்கள்; இனி இங்கு அரைக்ஷணமும் நிற்கக் கூடாது" என்று மெல்லிய குரலில் கூறி அவனை வெளியே அனுப்பி விட்டுத் தான் உள்ளே ஓடினள். "அப்பா! அப்பா! எனக்கு உத்திரவு கொடுக்கவேண்டும். என்னல் உங்களுக்கு எத்தகைய துன்பமும் வேண்டாம். என் கணவரால் கிடைத்த பத்தாயிரம் ரூபாயே உங்களுக்குப் போதிய மகிழ்ச்சியை அளிக்கும். நான் வருகிறேன். இனி என்னைத் தடை செய்துத் துன்புறுத்த வேண்டாம்....அம்மா! நான் வருகிறேன். என்று சொல்லி விட்டுக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு தடதடவென்று போய்விட்டாள்.

தாயும் தந்தையும் எத்தனை தடுத்தும் அந்த வார்த்தை பவானியின் காதிலே விழவே இல்லை. அவளுடைய உள் கருத்தாவது தன் கணவனின் சரியான துணையுடன் தன் மாமியாரிடம் சேர்ந்து விடவேண்டும். முடிந்தால் பெத்த மனங்குளிர ஒரு முறை பார்க்கும்படியாகவும் செய்து விடலாம். தள்ளாத வயதுடையவர்களாகையால் எப்படி இருக்குமோ! என்ற எண்ணத்துடன் துணிந்து கிளம்பி விட்டாள். இவளுடைய நம்பிக்கையான வேலைக்காரியைக் கூட அழைத்துக் கொண்டு தடதடவென்று மூலைக் கேட்டுக்குச் சென்றாள்.

தன் கணவன் எந்தப் பக்கமிருக்கிறான் என்பதையே பார்த்துக்கொண்டு நிற்கையில் ஒரு டாக்ஸி மோட்டாரில்

இவள் சற்றும் எதிர்பாராதவிதம் பூபதி ஓடோடியும் வந்து இறங்கி, பவானி! பவானி! இரும்மா! பெத்தபிதா உன்னைத் தன்னந்தனியே அனுப்பி பரிபவப்படுத்துவதற்கு மனந் துணியவில்லை. நானே நேரில் காரில் உன்னைக்கொண்டு போய் விட்டுவிட்டு உன்னிஷ்டப்படியே மாமியாரிடம் சொல்லி ஒப்படைத்துவிட்டு வருகிறேன். வண்டியில் ஏறம்மா! என்று சொல்வதைக் கேட்ட பவானியின் எதிர்பார்ப்பும் மனக் கோட்டையும் தவிடுபொடியாய் இடிந்துச் சிதறிவிட்டது. பெத்தபிதாவே தன் பாசத்தினால் ஓடி வந்தும் அவருடைய வருகை இவளுக்குப் பெருத்த நஷ்டத்தையும் ஏமாற்றத்தையுமே கொடுத்து விட்டதால் அவரிடம் பதில் பேசக்கூடத் தோன்றாமல் விழிக்கச் செய்தது. பெத்த பாசத்துடன் மனம் குழைந்து வந்திருக்கும் பிதாவை 'வேண்டாம்! போய் விடுங்கள்' என்று சொல்வதும் அழகில்லை; தன் கணவனிடம் இந்த சந்தர்ப்பத்தில் எத்தனையோ விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் பேசவும் எண்ணியது வீணாகி விடுகிறதே, அவர் மறுபடி போலீஸாரிடம் அகப்பட்டுக்கொண்டு விட்டால் என்ன செய்வது என்றெல்லாம் ஒரே குழப்பமாகி விட்டதால் தன் பிதாவுக்குப் பதில் பேசவும் தோன்றாமல் கல்லாக நின்று விட்டாள்

பூபதி:—பவானி! என்ன யோசனை செய்கிறாய்! முதலில் ஏதோ சொல்லிவிட்டுப் பிறகு வந்து விட்டேனே என்று இளப்பமாக எண்ணுகிறாயா! பவானி! நீ எண்ணுவதும் சகஜந்தான்; இருப்பினும் இத்தனை தீவிரமான கோபம் உனக்குக் கூடாதம்மா! நீ தனியாய்ச் செல்ல நான் பார்த்திருக்க மனமின்றி உன் பின்னாலேயே கிளம்ப எண்ணினேன். அதே சமயம் ஒரு தந்தி வந்தது........

என்ன தந்தி அப்பா! தந்தி என்பதைக் கேட்கும் போதே என்னிதயம் சிதறுகிறது. அவரைப்பற்றி ஏதாவது தகவலான தந்தியாப்பா! என்று பதறியவாறு கேட்டாள்.

பூபதி:—அதொன்றுமில்லை உன் மாமியாருக்கு திடீரென்று உடல்நிலை மிகமோசமாகி விட்டதாம். குழந்தையையும் உன்னையும் பார்க்க வேண்டுமென்று அலர்த்துகிறாளாம்; தன் மகனின் நினைவாகவே பிதற்றுகிறாளாம். உடனே உன்னை வரும்படி எழுதியிருக்கிறதைப் பார்த்தேன்; ரயிலில் போனால் விடியற்காலைதான் போகமுடியும் என்பதால் இந்த வண்டியை எடுத்துக்கொண்டு வந்தேன்.

அந்தம்மாளின் உயிரிருக்கும்போதே இந்தப் பச்சைக் குழந்தையையாவது காட்டி கடைசீ காலத்தின் தாபத்தைச் சிறிது தணிக்கலாம் என்றதால் ஓடிவந்தேன் என்று சொல்லியதைக் கேட்டதும் பவானியின் கண்களில் மளமள வென்று ஜலம் வந்துவிட்டது. இத்தனை ஆபத்தான நிலைமையில் எப்படி அவர் தன் மகனைப் பார்க்கச் செய் வது?—ஆபத்தைக்கூடவே தலையில்வைத்துக்கொண்டுள்ள அவரை அழைத்துக் காட்டுவது என்ற மகத்தான வேதனை யுடன் தன் கணவனிடம் இந்த விஷயத்தைத் தெரிவித்து விட்டால் பிறகு அவருடைய விதிப்படி நடக்கட்டும் என்று எண்ணியபடியே நாலுபுறமும் பார்க்கிறாள்.

தன் கணவனைக் காணவில்லை. மாமியாரின் நிலைமை எப்படி இருக்கிறதோ சீக்கிரம் போய்ச் சேர வேண்டும் என்கிற பரபரப்பும் பாதிப்பதால் தவிக்கிறாள் பாவம். மினுக்குமினுக்கென்று எரியும் விளக்கு வெளிச்சத்தில் சற்று தூரத்தில் போலீஸ்காரன் உடையில் நிற்கும் தன் கணவனின் உருவம் நிழல்போல் தெரிந்தது; அவரிடம் எப்படிச் சென்று இச்செய்தியைத் தெரிவிப்பது என்று க்ஷணநேரம் யோசித்தாள்; அடுத்த நிமிஷமே ஒரு துணிச்சலுடன் "அப்பா! நம் வீட்டுப்பின்பு காவலுக்கிருந்த சேவகன் அதோ நிற்கிறார்; அவர் மனைவி மிக்க ஆபத் தான நிலையிலிருப்பதாகக் கூறி வருந்தினர்; உதவிக் காக ஏதாவது கொடுத்துவிட்டு வருகிறேன். தாங்கள் வண்டியில் உட்காருங்கள்; தூரலில் நனைய வேண்டாம்" என்று கூறியவாறு தடதடவென்று முருகப்பன் நிற்கும் இடத்திற்கு போய்...."நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கின்றது. உங்களுடன் கூடச் செல்ல நினைத்த ஆசை கூட நிராசையாகி விட்டது; உங்கள் தாயாருக்கு திடீ ரென்று அதிகமாயிருக்கிறதாம்; உங்களைப் பற்றியே பிதற்றுகிறாராம்; தந்தி இப்போதுதான் வந்ததாம். அப்பாவே நேரில் காரில் அழைத்துச் செல்ல தயாராக வந்து விட்டதால் நான் நினைத்தக் கோட்டை இடிந்து விட்டது. தாங்கள் எந்தவிதமாகவாவது தங்கள் முன்னறி தெய்வத்தின் காலில் விழுந்து வணங்கி கடைசீ காலத்தில் அவர் மனத்தில் ஒரு த்ருப்தியை உண்டாக்கி விட்டுப் பிறகு எப்படியாவது இந்தப் பாழும் வழக்கிலிருந்து ஜெயித்து வாருங்கள். நாலுபுறமும் உங்களைத் தேடியலைவதால் நிமிஷத்திற்குநிமிஷம் என்னுயிர் ஊசலாடுகிறது. ஜாக்ரதை இதோ இந்த ரூபாயைக் கைச் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள். நேரமாகிறது, அப்பா காத்திருக்கிறார். நான் போகிறேன்" என்று துடிக்கத் துடிக்கக் கூறினாள்.

பாவம்! முருகைய்யனின் நிலைமையைக் கூறவேண்டுமா? பெத்த தாயின் விலைமதிப்பற்ற அன்பின் சக்தியை—மகிமையை இதுகாறும் உணராது தான்தோனியாய்த் திரிந்து அவர்களையும் வருத்தித் தானும் விபரீத விபத்தில் சிக்கிக்கொண்டு உத்தமியான மனைவியையும் கண்ணீர் பிம்பமாகக் கதறச் செய்துவிட்ட பாவத்தை எண்ணிக் கண்ணீர் வடித்து இனி என்ன பயன் பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்; உள்ளிப் பூண்டோடு வைத்த புஷ்பமும் துர்க்கந்தமாகும் என்பது சரியாகி விட்டதே. ஐயோ! என் அன்னைக்கா ஆபத்தின் அந்திம காலத்தின் நிலைமை வந்து விட்டது. பவானீ! பவானீ! நான் எப்படி இந்த நிலைமையில் என் முன்னறி தெய்வத்தை உயிருடன் போய்ப்பார்ப்பேன்? கண் கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்வதுபோல் என் கதியும் விதியும் முடிந்து விட்டதே! நான் என்னசெய்வேன்? என்று அந்த நிமிஷந்தான் தன் தாயினிடம் எங்குமில்லாத பாசம் இதயத்தில் புயலடித்தது.

இதற்கு பவானி என்ன பதில் சொல்ல முடியும்! கூட அழைத்துச் செல்வதற்கே முடியாதபடி தன் பிதா வந்து விட்டதால் வாய் திறப்பதற்கில்லை! தொண்டையை அடைக்கும் துக்கத்துடன் "ஸ்வாமீ! கிடைத்திருக்கும் நேரமோ மிகசொல்பம்; இதற்குள் நான் தங்களுக்கு உபதேசம் செய்வதாக நினைக்க வேண்டாம்! சத்யமாக நான் ஒரே ஒரு விஷயம் சொல்கிறேன். இனியாவது அதை நம்புங்கள்! கடவுள் ஒருவர் இருக்கிறூர் என்பதையே இதுகாறும் மறந்து மிருகம்போல் திரிந்து விட்டீர்கள். அதன் பலனையும் உணர்ந்து விட்டீர்கள். கடவுள் ஒருவர் இருக்கிறூர் என்பதை நான் பரிபூர்ணமாக நம்பி சதா ஸர்வதா பஜித்துக்கொண்டு வருவதால்தான் இத்தகைய விபத்துக்கள் வந்தும் சிறிது தப்பித்துக்கொள்ளும் நன்மை உண்டாகி யிருக்கிறது என்று நான் ஸத்யமாக நம்புகிறேன். கடவுள் ஒருவன் இருக்கிறூன். அவனை என்றும் மறக்காமல் இனியாவது பகவான் இருக்கிறூன்! அவன் தான் நம்மைக்காக்கக்கூடியரக்ஷகன் என்பதை மனத்தில் தீர்மானமாகப் பதித்துக்கொண்டு முற்றிலும்மாறிவிடுங்கள் அவன் உங்களைக் கட்டாயம் காப்பாற்றுவான். அதோ அப்பா கூப்பிடுகிறூர் நான் வருகிறேன். என்று கூறிக் கொண்டே சடக்கென்று வந்து காரில் அமர்ந்தாள். அடுத்தக்ஷணமே காரும் பறந்தது. கவலை தோய்ந்த முகத்துடன் பவானி தன் கணவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். முருகப்பனும் காரையேபார்த்தபடிக் கல்லாய்ச் சமைந்து விட்டான்.

## 23

### அதிர்ச்சியும் அமலியும்

எத்தகைய கஷ்டமான வ்யாதியாயினும் ஒரு க்ஷணத்தில் சொஸ்தப்படுத்தி அவர்களுக்குப் பேரானந்தத்தைக் கொடுத்துப் பூரிக்கும் டாக்டருக்கு– கத்தியுடன் விளையாடுவதுபோல் அனுயாஸமாக ரணஸிகிச்சை செய்துத் தெம்பாய் உலாவும் டாக்டருக்கு—இந்த பயங்கரத்தைக் கண்ட உடனே சப்தநாடியும் அடங்கிப்போய் அவருக்கே மயக்கம் போட்டு விடும் போலாகி விட்டது. சில நிமிஷங்கள் மெல்லச் சமாளித்துக் கொண்டு சில பெரிய விளக்குகளைக் கொண்டுவரச் செய்து முற்றிலும்பார்த்தார். ஜம்புலிங்கம் படுக்கையில் காணுது காலியாயிருப்பதைக் கண்டதும் வானமே இடிந்து அவர் தலையில் விழுந்து விட்டது போலான பெரிய அதிர்ச்சி உண்டாகி நிலைகலங்கிப்போய் அந்த இடத்தைச் சுற்றியுள்ள சகலமான இடங்களையும் ஒரு சுற்றுசுற்றிப் பார்த்து விட்டார். காலில் பெரிய கட்டுடன் அசைக்க முடியாதிருந்த நிலைமையில் ஜம்புலிங்கம் தானுக எங்கும் நகர்ந்துகூடச் செல்ல முடியாது. இது என்னவோ மகத்தான சதிதான்•நடந்து விட்டது. என்று டாக்டருக்கு நன்ருகத் தோன்றி விட்டதால் உடனே தன் வீட்டிற்கு ஓடி அவஸரமாகப் போலீஸை வரும்படி டெலிபோன் செய்துவிட்டு ஜம்புலிங்கத்தின் மனைவிக்கும் இந்த விஷயத்தைத் தெரிவித்துப் பின்னர் ராஜாவினிடம் ஓடிவந்தார்.

ராஜா தூக்கமே பிடிக்காமல் புரண்டு கொண்டே டாக்டரின் வருகைக்கு எதிர்பார்த்திருந்தான். டாக்டர் அங்கு வந்ததும் அவருடைய முகத்தில் படர்ந்துள்ள பயம் சோகம் முதலிய ரேகைகளைக் கண்ட சிறுவன் கூர்மையான புத்தியுடன் எழுந்து உட்கார்ந்து, டாக்டர்! என்ன விஷயம் உங்கள் முகத்தைப் பார்க்கும் போதே ஏதோ அதிர்ச்சியான சம்பவம் நடந்து விட்டதாகத் தெரிகிறது. ஜம்புலிங்க மாமா என்ன செய்கிருர்.சவுக்யமாயிருக்காரா! டாக்டர்? என்று பதை பதைக்கக் கேட்டான்.

டாக்டர்:—ராஜா! நீ மகாசூரன்;தீரன். வருங்காலத்தை உணர்ந்து அறிந்து சொல்லக் கூடிய வெகு தீர்க்கதரிசியாயிருக்கவேணும். அங்கு இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால் மிகமிகபயமாயிருக்கிறது, ராஜா! நீ தைரியமா இரு....என்ன! ஏன் இப்படி வழிக்கருய் என்று கூறி முடிப்பதற்குள் பின்னும் ஆத்திரமடைந்த ராஜா, டாக்டர்! நான் அனுப்பிய மனிதனல் ஏதாவது விபரீதம் நேர்ந்து விட்டதா? முதலில்சொல்லுங்கள்....

183198.

# அன்பர்களின் கடிதங்கள்

அம்மணீ! ப்ரவேசக் கட்டணச் செலவு எங்களுக்குமில்லை; பரிசளிக்கும் செலவு உங்களுக்குமில்லை. படிப்பவர்களுக்கு அறிவு வளர்ச்சிக்கும் பொழுதுபோக்குவதற்குமான ஸாதன முறையில் உங்கள் அறிவுப் போட்டியை நான் ரஸிக்கிறேன். தவிர ரேடியோவில் கேட்ட தென்னாட்டுக் கல்யாண முறைகளைக் கொஞ்ச கொஞ்சமாக மோகினியில் வெளியிட்டால் நன்றாயிருக்கும்.

பரிமளா ராகவன், பம்பாய்.

(தென்னாட்டுக் கல்யாண முறைகள் தனிப்புத்தகமாகவே தயாராகி வருகிறது; அடுத்த இதழுக்குள் விற்பனைக்குத் தயாராகிவிடும்.

மகாத்மாஜி ஸேவா சங்கத்தைப்பற்றி என் இப்பொழுது மோகினியில் ஒன்றுமே வருவதில்லை? அதை விட்டு நீங்கள் விலகி விட்டீர்களா! அல்லது சங்கத்தில் ஒன்றுமே நடப்பதில்லையா.

லக்ஷ்மிகாந்தம், புரசைவாக்கம்.

(கடவுள் க்ருபையில் சங்கம் வெகு நன்றாகவே நடக்கிறது. நானும் சங்கமும் உயிரும் உடலும் போலத்தானிருக்கிறோம். பத்திரிகையில் இடவசதியில்லாததால் சில சமயம் விஷயம் வர முடிவதில்லை.)

ஜோஸியப் பகுதியே இக்காலத்தில் மிகவும் விரும்பப்படுகின்றதே...நீங்களேன் அந்தப் பத்தி வெளியிடுவதில்லை?

பாலசுந்தரம், கல்கத்தா.

(ஏராளமான வாசகர் விரும்பினால் போடலாம்.)

கதைப்பகுதியை இரட்டிப்பாக்க வேண்டுமென்று நான் மிகவும் கேட்டுக்கொள்கிறேன். கமலா சந்திரன், ஜபல்பூர்.

(கூடுமான வரையில் அதிகப்படுத்துகிறேன்.)

உங்கள் பத்திரிகையில் சினிமா விமர்சனமோ! புத்தக விமர்சனமோ ஏன் வருவதில்லை? விமர்சனமே உங்களுக்குப் பிடிக்காதா?

உமாபதி, பம்பாய்.

(இனியேல் எல்லா விமர்சனங்களும் தவறாமல் வரும்)

## சில அபிப்பிராயங்கள்

ப்ரதிபிம்பம் என்ற தொடர்கதை மிகவும் பிடித்திருக்கிறது. எழுத்து நடையில் இன்னும் சற்று விறுவிறுப்புடன் இருந்தால் வெகு ரஸமாக இருக்கும். மேனாட்டுத் தத்துவம் இன்னும் எத்தனை வருடங்களில் முடியப் போகிறது. ராமஸ்வாமி, பன்ருட்டி.

சென்ற இரண்டு மாதங்களாக நேயர்களின் விருப்பத்திற்கு பதிலளிக்கும் பகுதியை கண்ணுற்று இதை எழுதுகிறேன். காளிதாஸர் கனவும் மேனாட்டுத் தத்துவமும் இலக்கிய உலகிற்கு இன்றியமையாத விருந்தாகும். இவற்றை இன்னும் அதிகப் பக்கங்களுடனே எழுத வேண்டுகிறேன். வை.மு.ஸ்ரீயின் விஷயமே இல்லாதது பெருங்குறை. சோகப்ரதானமாய் பழய புத்தகங்களைப் போல் நிறைய பக்கங்களுடன் உங்கள் கதை எதிர்பார்க்கிறேன். வாழ்க மோகினி! M. அநந்தாழ்வான், ஆழ்வார் திருநகரி.

மோகினியில் வரும் ஒவ்வொரு அம்சமும் மிகரம்யமானதா யிருக்கிறது; இதை வாரப் பதிப்பாகச் செய்தால் அழகாக இருக்கும் என்று கோருகிறேன்.

ரமணி பரமேச்வரன், மேலார்க்கோடு பாலக்காடு.

சந்திரகலா மாலை ஒரு இனிய பொழில் என்றால் மிகை யாகாது. அதிலுள்ள பாடல்களோ! தாமரை மலர்கள்; அதன் கருத்துக்களோ! அதிமாதுர்யமான தேன். அந்தச் சுவையை வண்டுகள் போல் நாங்கள் சுவைக்கின்றோம்.

பார்வதி சுந்தரம், தூத்துக்குடி.




JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.